பக்கங்கள்-16 | 14.தை.2024 | விலை-50.00




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 429





## தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையைத் தக்கவைக்க, தமிழரசுக் கட்சி தெரிவுசெய்யப்போகும் அடுத்த தலைவர் யார்?

## ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை ஏன் நிறுத்தவேண்டும்?

## ஆயுதக் கட்சிகள் மீண்டும் தமிழின விடுதலைக்காகப் போராட முன்வரவேண்டும்

# ஆயுதக் கட்சிகள் மீண்டும் தமிழின விடுதலைக்காகப் போராட முன்வரவேண்டும்



தமிழினம் ஏன் போராடத் தயாராகவேண்டும் என்ற சூழலுக்குள் தற்போது தள்ளப்பட்டிருக்கின்றது. 22 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த 2024ஆம் ஆண்டில் சின்னாபின்னமாக உடைந்துபோயுள்ளது. இந்தப் பிளவின் நிமித்தமாக தற்போதைய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் பாதகமான நிலையினையே கொண்டிருக்கின்றன.

தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கின்றோம் எனக் கூறிவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்கிற சொற்பதத்தோடு இவ்வளவு காலமும் இயங்கி வந்தது. ஆனால் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பதவியேற்றதன் பின்னர் இன்று இப் பிளவுகள் நிரந்தரமாகவே நிலைபெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஆகவே மீளவும் இவர்கள் கூட்டிணைவதற்கு எந்தவித முகாந்திரங்களும் இல்லை, இருந்தாலும் DTNAவுடன் இணைந்து செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகத் தென்படுகின்றது. தமிழரசுக் கட்சி இன்று தனித்து விடப்பட்டுள்ள கட்சியாக மாற்றம் பெற்றுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன் மற்றும் சுமந்திரன் போன்றோர் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டி போடுகின்றார்கள். இதில் சுமந்திரன் அவர்கள் தலைவராக தெரிவானால் தமிழரசுக் கட்சியினையும் சின்னாபின்னமாக உடைத்துவிட்டுச் செல்வார் என்கிற கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. ஒற்றுமையாகப் பேசி தலைவர் பதவியினைப் பெற்றுக்கொள்வோம் என்கிற ரீதியிலும் பேச்சுக்கள் இடம்பெறும் அதேநேரத்தில் மக்களது கருத்துவித்தியாசமானதாக இருக்கிறது.

இதுவரை தலைவர் பதவிக்காக யாரும் போட்டியிடவில்லை என்கிறபோதிலும் இம்முறை தலைவர் பதவியானது போட்டியின் அடிப்படையில் தெரிவு செய்யவேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளது. ஆகவே தமிழர் தரப்பு நாடளாவிய ரீதியில் போராட்டங்களை வலுப்படுத்தவேண்டும்.

அஹிம்சை வழியிலானப் போராட்டங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும். கடத்தப்பட்டுக் காணாமல் போனவர்களுக்கானத் தீர்வுக்காக ஒன்றித்துப் போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும். காணி சுவீகரிப்பு தொடர்பாக போராட்டங்களை நடாத்தவேண்டும். தமிழ் மக்களுக்கானத் தீர்வுகளைப் பெற அஹிம்சை ரீதியிலானப் போராட்டங்கள வலுப்படுத்தப்பட வேண்டும். அப்படிச் செய்தால் மாத்திரமே நாம் பலம் பெறுவோம். கட்சிகள் வேறு வேறாக இருந்தாலும் நாம் எமக்காக ஒற்றுமைப்படவேண்டும். பழைய கதைகளைப் பேசிப் பேசி வீணாக காலத்தைக் கடத்துவது எமக்கானத் தீர்வாக அமையாது.

ஏற்கனவே தமிழ்க் கட்சிகளிலுள்ள பலர் அரசுடன் கைகோர்த்துள்ளனர். பலர் தயாராக உள்ளனர். எதிர்காலங்களிலும் இவர்களைப் போல பலரை அரசு கூட்டு ஒப்பந்தங்களின் மூலமாக தம்பக்கம் இழுத்துக்கொள்ளும் நிலையே காணப்படுகின்றது. இவ் அரச நிகழ்ச்சிநிரலைத் தடுப்பதற்கு நாம் எமது போராட்டங்களைத் தீவிரப்படுத்தி சர்வதேச ரீதியாக எம்மை நாம் பலமாக வெளிக்காட்டவேண்டும். அப்போதுதான் எமக்கான விடுதலைக்கான இலக்கினை அடைய முடியும்.

சர்வதேச அமைப்புகள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், தமிழ் அரசியல் தலைமைகள், புத்திஜீவிகள் எனப் பலரால் தமிழ் மக்கள் தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கைகள், பரிந்துரைகள், பிரேரணைகள் என அனைத்தும் கிடப்பில் தான் போடப்பட்டுள்ளது. தமிழ் மக்களது இனப்படுகொலை விவகாரத்தை அடுத்த கட்டம் நோக்கி நகர்த்திச்செல்ல உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி கட்டமைப்பு இன்னுமின்னும் வலுவாக்கப்படவேண்டும்.

சிங்களத் தரப்பு நாட்டில் வலுவாக நின்று வேலைகளைச் செய்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகவே அவர்கள் இன்னமும் இந்த நாட்டில் பார்க்கிறார்கள். யுத்தம் நிறைவடைந்து 14 ஆண்டுகள் கடந்துவிட்டபோதிலும் இந்த நாட்டில் விடுதலைப்புலிகள் எனக் கூறிக்கொண்டு எந்தவிதமான தாக்குதல்களும் நடத்தப்படவில்லை. அங்கீகரிப்பதற்கான வாய்ப்புக்கள் இருந்தும் தமிழினம் தொடர்பான சிங்கள அரசுகளின் நிகழ்ச்சிநிரலும் பார்வையும் இன்னமும் மாறவில்லை. நாட்டின் பௌத்தசிந்தனையாளர்கள் மாற்றம் பெறவில்லை.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து இன்று வரை இலங்கையில் வாழும் தமிழினம் சிங்கள அரசுகளால் சொல்லொனாத் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறது.

வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்துக்கான தீர்வுகளை வழங்க அரசு இன்னமும் தயாராக இல்லை. பல தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டபோதும் எதுவும் பயன்தரவில்லை. இதில் சோரம் போனவர்களாக தமிழ்த் தரப்பினர் பலர் அரசுடன் ஒட்டிக்கொண்டிருப்பது வேடிக்கையான விடயம். இவர்கள் அரசியல் பரப்பில் இருந்து அகற்றப்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

2024ஆம் ஆண்டு சவால் நிறைந்த ஆண்டாக மலர்ந்துள்ளது. இன்று ஜனாதிபதித் தேர்தலை நோக்கியே அரசியல் நகர்த்தப்படுகின்றது. இதில் யாருக்கு ஆதரவினை வழங்கவேண்டும் என்பதில் கட்சிகள் மும்முரம் காட்டத் தொடங்கியுள்ளன. இரகசியப் பேச்சுக்களும் ஆரம்பமாகியுள்ளது. தற்போதுஜனாதிபதிரணில் அவர்கள் இதனை ஆரம்பித்துவிட்டார்.

ஒரு தேர்தல் வருகின்றபோது தமிழ் மக்களை அணுகுவதும், பிரச்சினைகள் குறித்துப் பேசுவதும், அபிவிருத்திகள் குறித்து வார்த்தைகளை அள்ளிவீசுவதும், சாதனையாளர்களை கௌரவிப்பதும் என பல செயற்பாடுகளை தென்னிலங்கையினர் செய்ய ஆரம்பித்துவிட்டனர்.

எது எவ்வாறாகவிருப்பினும் தமிழ் மக்களாகிய நாம் எமது தரப்பில் இருந்து எவ்வாறு காய்களை நகர்த்தவேண்டும் என்பது மிகவும் முக்கியம். காலத்துக்குக் காலம் மாறி வரும் அரசுகள் தமக்கேற்ற அரசியல் சிந்தனைகளைக் கொண்டிருக்கின்ற காரணத்தினால் தமிழ் மக்களது முன்னெடுப்புக்கள் பின்நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றன.

ஆகவே இதிலிருந்து நாம் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டுமாகவிருந்தால் சர்வதேச நாடுகளின் உதவியுடன் தொடர்ந்து அஹிம்சை ரீதியிலானப் போராட்டங்கள் இந்த நாட்டில் முன்னெடுக்கப்படவேண்டும். இவ்வாறான அழுத்தங்களினால் தான் அரசாங்கம் தமிழ் மக்களுடன் பேச்சுக்களுக்கு வரும் என்பதைத் தவிர வேறு வழியில்லை.

சீனாவினது ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்துள்ளது. இந்தத் தீவு சீனத் தீவாக மாற்றம் பெறக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இந்தியா இலங்கையினை தனது முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிகளை மேற்கொள்கின்றபோதும் அது சாத்தியப்படாமல் போகும். காரணம் என்னவென்றால் இலங்கையின் முக்கியப் பிரதேசங்களான துறைமுகப் பகுதிகளை சீனா தன்வசப்படுத்தியுள்ளது. வியாபார நிலையங்களை இலங்கையில் திறந்துள்ளது. எரிபொருள் வர்த்தகம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் இலங்கை எவ்வாறு முன்னேற்றமடைவது. அவர்கள் தங்களது சுயலாபத்திற்காக இலங்கையின் பகுதிகளை துண்டு துண்டாக உடைத்து விலைபேசி வருகின்றனர். கொழும்பில் போர்ட் சிற்றி என்கிற துறைமுக நகரம் பிரமாண்டமாக அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இலங்கை இந்த நாடுகளின் பிடிகளில் இருந்து விடுபட முடியாமல் தவிக்கிறது. பொருளாதார ரீதியாக இலங்கை இன்னமும் மீள கட்டியமைக்கப்படவில்லை. நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள்ளது.

தமிழர் தரப்பு கடந்த காலங்களில் பல விடயங்களில் சிந்தித்துச் செயற்படவில்லை. இன்று கட்சி அரசியலுக்காக அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. தமிழ்த் தரப்பின் பக்கம் இன்று ஏராளமான கட்சிகள் காணப்படுகின்றன. இவர்கள் அனைவரும் ஒற்றுமைப்படவேண்டும்.

அரசின் பக்கம் சார்ந்துள்ள தமிழ்த் தரப்பினர் தமிழ் மக்களால் ஓரங்கட்டப்படவேண்டும். எவ்வித பயனும் இல்லாமல் தமது சுகபோகங்களுக்காக தமிழ் மக்களை விற்றுப்பிழைப்பு நடத்தும் இவர்கள் குறித்து தமிழ் மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அழிவிலிருந்து பாதுகாக்கவும், தமிழ் மக்களது விடுதலைக்காகப் பாடுபடும் தமிழ்க் கட்சிகள் அனைவரும் ஓரணியில் இணைந்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும் என்பது காலத்தின் தேவையாகும்.

**இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## பௌத்தமயமாக்கலும், உரமூட்டப்படும் இனவாதமும்

தமிழர் வாழ் பிரதேசங்கள் தொடர்ச்சியாக சிங்கள பௌத்த தேரர்களாலும், அவர்களுக்கு உடந்தையாக இருக்கும் தொல்லியல் திணைக்களம் மற்றும் முப்படைகளாலும் பௌத்தமயமாக்கலுக்குள் சிக்குண்டு சின்னாபின்னமாகி வருகின்றது. இந்து சமய மக்களின் வழிபாட்டிடங்கள், ஆரம்பத்தில் மன்னர்களால் உடைக்கப்பட்டு முற்றாக இல்லாமலாக்கப்பட்டு பாரிய அழிவொன்றினைச் சந்தித்தது போல, இன்று பௌத்தர்களால் திட்டமிட்டு சைவ ஆலயங்கள் அழிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கில் தமிழர் வாழும் பிரதேசங்கள் எங்கிலும் பௌத்த விகாரைகளை நிறுவி, இதுவொரு சிங்கள பௌத்த நாடு என்பதை முழு உலகிற்கும் பறைசாற்றுவதே அரசின் நிகழ்ச்சிநிரல். கிழக்கில் முஸ்லீம் மக்கள் வாழும் இடங்களும் இன்று பறிபோகும் அபாயத்தில் உள்ளது. அங்கு மேய்ச்சல் தரை நிலங்களை அடாத்தாக கையகப்படுத்தும் வேலைகளை சிங்களத் தரப்பினர் செய்கின்றனர். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு இருந்த காலத்தில் பௌத்த விகாரைகள் இருந்தபோதிலும், பௌத்தமயமாக்கல் விரிவுபடுத்தப்படவில்லை.

முப்படைகளையும் தன்னகத்தே கொண்டு ஆயுத ரீதியாக பலம்பெற்றிருந்த விடுதலைப்புலிகளை இந்த விடயத்தில் அரசால் அசைத்துப்பார்க்க முடியவில்லை. ஆனால் இன்று தமிழ் மக்களது ஆயுதப் போராட்டங்கள் வடக்கு கிழக்கில் மௌனிக்கப்பட்டிருக்கும் சூழலை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் அரசு, தமது கைக்கூலிகளைக் கொண்டு, பெருமளவில் வடக்கு கிழக்குக்கு முப்படைகளை அனுப்பி முகாம்களை நிறுவி, உயர்பாதுகாப்பு வலயங்கள் என்கிற போர்வையில், பௌத்த விகாரைகளை கட்டி வருகின்றனர். அன்று விடுதலைப்புலிகளால் அரச நிகழ்ச்சிநிரலைத் தடுக்க முடிந்தது. இன்று எம்மத்தியில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகளின் ஒற்றுமையின்மையாலும், அரசுடன் ஒட்டி உறவாடும் தமிழ்த் தரப்பினராலும் எதனையும் தடுக்க முடியவில்லை. தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று, அரசிற்கு ஆதரவு வழங்குவதும், பின்னர் எதிர்ப்பதும், பேச்சுவார்த்தை மேசைகளில் பங்குகொள்வதும் என நாடக அரசியலைச் செய்து வருகின்றனர்.

மறுபக்கத்தில் இனவாதம் பேசிப்பேசி இந்த நாட்டில் போராட்டங்களை உண்டாக்கி மூவின மக்களையும் சிதைத்தவர்களால், இன்றும் இனவாதம் தான் பேச முடிகின்றது. தர்மத்தினைப் போதித்த பௌத்த மதம், இன்று அதர்மத்தின் வழியில் பயணிப்பதைக் காணமுடிகிறது.

பௌத்த தேரர்கள் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளை, பிரச்சினைகளைத் தீர்க்கும் நோக்கில் அரசிற்கு அழுத்தம் கொடுப்பவர்களோ அல்லது தமிழ் மக்கள் முன் வந்து பேசுவதற்கோ தயாராக இல்லை. அவர்கள் நாம் பெரும்பான்மையாக இருக்கிறோம். இதுவொரு சிங்கள பௌத்த நாடு என்கிற மமதையில், உடல் முழுவதும் இனவாத சிந்தனைகளை வரித்துக்கொண்டு, நாட்டின் முன்னேற்றத்திற்கு, நல்லிணக்க முயற்சிகளுக்கு, ஜனநாயக விழுமியங்களுக்கு முரணாகவே செயற்பட்டு வருகின்றனர்.

இன்றைய ரணில் தலைமையிலான அரசும் தமிழ் மக்கள் விடயத்தில் அக்கறை கொள்ளவில்லை. இனவாத சிந்தனைகள், பௌத்த மேலாதிக்க போக்கில் மாற்றம் ஏற்படாமல் இந்த நாட்டில் நல்லிணக்கத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் நாம் காண முடியாது.



## 28

### பல்துறை எழுத்தாளர் புயல் பெ.ஶ்ரீகந்தநேஷன்



அதன் மேலே சிங்களத்தில் ஏதோ எழுதப்பட்டு இருந்தது. கீழே, 'Dear girl friend we are getting married next holiday. It has been five years since we next. Oran looking for a little bit of cach' என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்திச்சு. அந்த படம் பல அர்த்தங்களைப் புலப்படுத்தினாலும் பிணமாகக் கிடக்கும் இராணுவ வீரனால், தன்னுடைய காதலிக்கு எழுதப்பட்ட கடிதம் - மட்டும் உண்மை."

"இப்ப அந்த படம் எங்க?"

"வீட்ட கொண்டு போனா அப்பா அடிப்பாரு - வீசிப் போட்டு, இப்ப அந்த படத்தை நினைத்துக் கவலைப் படுறன். பிறகு கேளுங்களேன்"

"பிள்ளைகளும் சாப்பாட்டுக்கு வர போகுதுகள் சொல்லி முடியுங்கள்"

"நாங்கள் ஒ.எல் பொடியள் கொஞ்சபேர் நின்றுகொண்டு, அப்போது உயிரின் பெறுமதி தெரியாமல் விடுப்பு பார்த்துக் கொண்டு நிண்டனாங்கள். எங்களை நோக்கி, இரண்டு அண்ணன்மார் வந்து, 'தம்பி உங்களோடு கொஞ்சம் கதைக்கலாமா?' என்றார்கள். நாங்களும் ஓம் என்றோம். நாங்கள் மூன்று பொடியள் நின்றோம். ஒருவனை மாவீர குடும்பம் என்றும் மற்றவனை போராளி குடும்பம் என்றும் குடும்பங்களில் அவர்கள் மட்டுமே இப்போது இருப்பதாலும், அவர்கள் இருவரையும் விட்டு விட்டார்கள். 'நீங்கள் இப்போது வேண்டாம்' என்றார்கள். அந்த பிரச்சாரகாரர்களிடம் மாட்டுப்பட்டு பெரியபாடுபட்டு என்ர உடல் ஊனத்தைச் சொல்லித்தான் தப்பி வந்தனான். அப்பவும் அப்பா போகேக்க, 'அங்க போக வேண்டாம்' என்று படிச்சு படிச்சு சொன்னிச்சு. நான்தான் கேட்கவில்லை."

"என்ன ஊனம் தம்பி?"

"அது சின்ன வயதில் விழுந்த, காயத்தின் தழும்பு ஒன்று அதைக் காட்டி, அரை மணி நேரத்திற்குப் பின் பிள்ளைப் பிடிகாரர்களிடமிருந்து தப்பி வந்திட்டேன். சிறிது நேரத்தில் சில தாய்மார்கள் தங்களுடைய பிள்ளைகளைக் காணோம் என்ற அலறல் சத்தம் வீதியெங்கும் கேட்டது' சில தாய்மார்கள் பைத்தியம் பிடித்ததைப் போல, அந்த அந்த இடங்களில் பட்ட வெயிலுக்கு மத்தியில் குளிரில் உறைந்த பனிக் கட்டிப்போல, வியர்வை ஆறாக பெருக்கெடுத்து ஓட உணர்வு அற்று நின்றனர். எங்கட ஆக்களிலையும் ஒரு சிலரைத் தவிர, மிச்ச ஆக்கள் எல்லாம் வேற வேற காரணங்களுக்குத் தானே இயக்கத்துக்குப் போறாங்க."

சாத்தின் கதைகளைக் கேட்டதும் யூஜீனின் அம்மாவிற்கு, தனது மூத்த மகன், அப்பா மோட்டர் சைக்கிள் வாங்கிக் கொடுக்கவில்லை என்பதற்காக இயக்கத்துக்குப் போய் மூன்றாம் நாள் பிணமாக வந்த சோக வரலாறு ஞாபகத்திற்கு வந்தது. அதுவும் பதினேழு வயதின் ஆரம்பத்தில் இருந்த மகனை பலிகொடுத்து, இருபது வருடங்கள் கடந்து விட்டமை நேற்று இன்று போல் இருந்தது. அவள் சிறிது நிசப்தமாக இருந்தாள்.

குறுக்கிட் சாத், "என்ன அம்மா 'சைலன்ஸ்' ஆகிட்டிங்க?'

"அப்பாவேடை சண்டை பிடிச்சுக் கொண்டு, ஏக்கத்துக்குப் போனவன் போனவன்தான்" - கரங்களினால் கண்களைத் துடைத்தாள்.

"என்ர கதையைக் கேட்டு, உங்களுக்கு பழைய விடயத்தை ஞாபகப்படுத்தி, துன்பத்தில் விழுத்துற மாதிரிப் போச்சு. மன்னிக்கனும்"

"நீங்க ஏன் தம்பி மன்னிப்பு கேக்கிறீங்க? எல்லோருக்கும் சோக வரலாறும் நல்ல வரலாறும் உண்டு"

வழிப்போக்கனாக, மகன்மார்களின் உதவியுடன் தற்காலிகமாக தங்கும் இடத்திற்கு தஞ்சம் புகுந்த சாத்திடம் அந்த தாய் இவ்வளவு நம்பிக்கையாக உரையாடுவது அவனுக்கு அவள் மீதும் அந்த குடும்பத்தின் மீதும் கௌரவமும் பற்றும் பாசமும் அதிகரித்தன. இப்போது அந்த தாயின் மீது பக்தியும் பயமும் அதிகரித்தன. இருவருக்கும் இடையே இனம் புரியாத நம்பிக்கை ஒளிக் கீற்று பிறந்தது.

"அதுதான் அம்மா, உங்கட முகம் எந்த நேரமும் கவலையா இருக்குது? கவலை மனிதனுக்குத் தானே கவலைப்பட வேண்டாம்"

"செத்தவன், பாவம் நிம்மதியா போயிட்டான். இருக்கிறதுகளாலே கவலையா இருக்கு?"

"அப்படி யாரால் கவலை?"

"பிள்ளைகளாலதான் கவலை"

"ஏன்?"

"மூன்று பிள்ளைகளாலையும் ஆக்கினை இல்லை"

"அப்ப யாரால் ஆக்கினை?"

"இவள் ஏ.எல். படிக்கிற கார்த்தியால தான் ஆக்கினை"

ஆரம்பத்தில் கார்த்திகாவைப் பற்றி ஊகித்த விடயம் உண்மை - எண்ணி சந்தோசப்பட்டான். தன்னுடைய தீர்க்கத்தரிசனப் பார்வையை எண்ணி பூரிப்பு அடைந்தான். அந்த குடும்பத்திற்கு நன்றி கடனாக ஏதாவது வழியில் உதவ அவனது மனம் துடித்தது. இருந்தும் இனம் புரியாத பயம் அவனைப் பயமுறுத்தியது. இருந்தும் மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு,

"ஏன் அம்மா இப்படி சொல்லுறீங்க?"

"என்ர மனுசன் கஸ்ரப்படேக்க கிருபா தம்பிக்கிட்டத்தான், கடனா காசு வாங்கி 'வேன்' எடுத்து ஓட ஆரம்பிச்ச பிறகுதான், எங்கட குடும்பம் கொஞ்ச நல்ல நிலைக்கு வந்தது"

"அம்மா...அம்மா... கதவை திறவுங்கள்." - வெளி வாசலில் இருந்து சத்தம் உள்ளே வந்து, இருவரதும் செவிப்பறைளைக் கிழித்தது.

"கார்த்தி வந்துட்டாள் போல, கொஞ்சம் கதவை திறந்து விடுங்கோ, தம்பி."

சாத் சற்று நகர்ந்து கதவைத் திறந்து விட்டான். கார்த்திகா உதடுகளினால், மெல்லிய புன்னகையைப் புன்னகித்துவிட்டு, "குடாப்ட நூனன்" - தனது பாதணிகளைக் கழற்றி பாதணிகளுக்காக அமைக்கப்பட்ட தட்டில் வைத்தாள்.

"குடாப்ட நூன்"

"போன வேலை ஒக்கேவா?"

"'டோக்கன்' எடுத்து பதிஞ்சாச்சு. இனி 'கிளியரன்ஸ்' வந்தோன 'டிக்கட்' எடுக்க வேண்டியது தான். எப்படியும் இரண்டு கிழமைக்கு மேலதான்?"

"இனி எப்ப போகனும்?"

"நாளைக்குப் போகனும்"

விரைவாக அங்கும் இங்கும் தொழிற்படும் கண்களும் சற்று சிவப்பு நிறமான மேனியெங்கும் கஸ்தூரி மஞ்சளைப் பூசியிருப்பது அவளது அழகு உலகிற்குச் சற்று அதிகமாகவே தென்பட்டது.

பதினெட்டு வயது நிரம்பாத அவள் சிறுமி பருவத்தைக் கடந்தவள் போல காட்சியளித்தாள். எல்லோருக்கும், அவளைப் பார்க்கும் போது தோன்றுகின்ற எண்ணம் அடுத்த சந்திப்பு எப்போது? அந்தளவுக்குக் கிண்டலாகவும் நகைச்சுவையாகவும் வெகுளித் தனத்துடனும் சின்னப் பிள்ளைத் தனமாகவும் பேசக் கூடியவள். கொஞ்சம் தத்துவார்த்தமாகவும் கதைக்க கூடியவள். இப்படியான இயல்புகளைக் கொண்டு இருப்பாள் - சாத் கணக்குப்போட்டுக்கொண்டான்.

"எனக்கும் 'கெம்பஸ்' கிடைச்சா? இப்படிதான் கப்பல் 'டிக்கட்டுக்கு' திரியனுமா?"

"அது என்ன கிடைச்சா? இல்லை, கிடைக்கும். நீங்க ஊர்காரங்கள் 'டிக்கட்டுக்கு' திரிய வேண்டியதில்லை"

"அப்ப நீங்க அண்ணா சாத்திரமும் பாப்பிங்களா? என்ன ஊர்க்காரங்களுக்கு வேறையா 'டிக்கட்' கொடுக்குறாங்களா?" - கேட்டுவிட்டு சிரித்தாள்.

"தங்கச்சி ஏன் என்னைச் சாத்திரகாரன் - சொன்னீங்க. நான் என்ன அப்படியா தெரியிறன்"

"தெரியவில்லை"

"அப்ப"

"பின்ன என்ன? நான் 'கெம்பஸுக்கு' போவன் - அடிச்சு சொல்லுறீங்க"

"இதுக்கு சாத்திரமும் மண்ணாங்கட்டியும் ஏழில் செவ்வாயும் மூக்கில் சனியும் தேவையில்லை. ஒரு ஆளைப்பார்த்தா தெரியாதா?"

"அப்ப ஆளைப்பார்த்து எல்லாம் சொல்லுவிங்க. கெட்டிக்கார அண்ணா. கையைத் தட்டுங்கோ" - கையைத் தட்டிக்கொண்டு பின்னர் ஆறுதலாக கதைப்போம் - பார்வை தோரணையில் தனது அறையை நோக்கி நகர்ந்தாள்.

அவ்வேளை முகட்டின் உச்சியிலிருந்து விழுந்த சிறிய வெள்ளை நிற வண்ணாத்துப் பூச்சியைப் இரண்டு பல்லிகள் துரத்தின. பறக்கவே முடியாது அந்த வண்ணத்துப் பூச்சி தத்தளித்தது.

சாத்தைப் பாவையுற்ற பல்லிகள் இரண்டும் சற்று நின்று தலையைத் உயர்த்திப் பார்த்தன. கஷ்டப்பட்டு, எழுந்து, பறந்து வண்ணத்துப் பூச்சி சாளரத்தினூடாக வெளிச் சூழலுக்குப் பறந்து சென்றது.

# தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமையைத் தக்கவைக்க தமிழரசுக் கட்சி தெரிவுசெய்யப்போகும் அடுத்த தலைவர் யார்?



தமிழரசுக்கட்சியின் தேசிய மகாநாடு எதிர்வரும் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெறவுள்ள தாக இலங்கை தமழரசுக்கட்சியின் செயலாளர் டாக்டர்.சத்தியலிங்கம் அறிவித்துள்ள நிலையில் மகாநாட்டை நடத்த முடியுமா முடியாதா என்ற பல்வேறு பிரச்சனைகளையும் சவால்களையும் எதிர் கொண்டிருக்கிறார்கள் நடப்பு நிர்வாகத்தினர்.

கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டியில் மூவர் களம் இறங்கியிருப்பது கட்சிக்குள் ஒருவகை நெருக்கடியையும் குழப்பத்தையும் உருவாக்கியிருக்கிறது என்பது கட்சி பிரமுகர்களின் கருத்தாகும். திருகோணமலை மாவட்டத்தில் இடம் பெற்ற கட்சியின் வட்டார தெரிவின்போது? ஊழல்கள் மற்றும் மோசடிகள் இடம்பெற்றிருப்பதால் அனைத்து கிளைகளும் கலைக்கப்பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவேண்டுமென கட்சியின் மூத்த தலைவரான இரா.சம்பந்தன் கோரிக்கை விட்டிருப்பதுடன் மகாநாட்டை ஒத்திப்போடும்படியும் காட்டமாக சம்பந்தன் கட்சி தலைவர் மாவை சேனாதிராஜாவுக்கு எழுத்து மூல வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

திருகோணமலை வட்டாரக்கிளைத் தெரிவுகளில் இடம்பெற்ற முறைகேடுகளை சரி செய்யாமல் மகாநாட்டை நடத்துவது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகிய தனக்கு அவ கௌரவத்தை உண்டாக்கிவிடும். எனவே திருமலையில் மகாநாட்டை நடத்தும் தீர்மானத்தை ஒத்தி வையுங்கள் என கட்சியின் மூத்த தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய இரா.சம்பந்தன் கோரிக்கை விடுத்திருப்பது கட்சிக்குள் பல்வேறு நெருக்கடிகளையும் கருத்து வேறுபாடுகளையும் உண்டாக்கியிருக்கிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் நடப்பு நிர்வாகத்துக்கான தலைவர், செயலாளர், பொருளாளர், மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களை தெரிவு செய்யும் நடைமுறை எதிர்வரும் 21 ஆம் திகதி திருகோணமலையில் நடத்தப்படவுள்ள நிலையில் தலைவர் பதவிக்கான போட்டி எக்காலத்திலும் இல்லாத வகையில் மிக கடுந்தன்மை பெற்றிருப்பதாகவும் உடன்பாடு காண எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தலைவர் பதவிக்கான தெரிவு தொடர்பாக உடன்பாடொன்றை காண கட்சியின் மூத்த தலைவரான இரா. சம்பந்தன் அவர்கள் போட்டி இல்லாத வகையில் தெரிவு இடம்பெறுவது கட்சியின் எதிர்காலத்துக்கு உதவும் எனவும் சகல உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் சேர்ந்து இந்த முடிவுக்கு வரவேண்டுமென பாராளுமன்ற வளாகத்தில் சந்தித்து உரையாடிய சிவஞானம் சிறிதரனிடம் எடுத்துக்கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை தமிழரசுக்கட்சி எவ்வாறு பலமாக இருந்ததோ அதேபோன்றநிலமைதொடரவேண்டும் நாம் தொடர்ந்து பலத்துடன் இருக்கவேண்டும். கட்சிக்குள் போட்டி வந்தால் அது கட்சியையும் உறுப்பினர்களையும் பலவீனப்படுத்திவிடுமெனவும் சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

தலைவர் பதவிக்கான போட்டியாளர்களாக கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராகிய சிவஞானம் சிறிதரன், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் போட்டி யிடுவதாக அறிவித்திருந்தபோதும் திரு. யோகேஸ்வரன் தான் போட்டியிலிருந்து விலகுவதாகவும் தனது ஆதரவை சிறிதரனுக்கு வழங்கப்போவதாகவும் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

சுமந்திரன் ஏலவே தனக்கு ஆதரவை திரட்டுவதற்காக கட்சி ஆதரவாளர்களை தேடி வட கிழக்கில் சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டிருந்த நிலையில் தற்போது சிறிதரன் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு சென்று ஆதரவாளர்கள் மத்தியில் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகிறார் என்பதை அறியக் கூடியதாகவுள்ளது.

சிறிதரனுக்கும் சுமந்திரனுக்கும் இடையிலான போட்டி உச்சளவு பெற்றிருக்கும் நிலையில் யார் தலைவராக வரப்போகிறார்கள் என்ற கடுமையான நிலையை உருவாக்கி வருகிறது. இந்தப்போட்டியில் சிவஞானம் சிறிதரனுக்கு ஆதரவு தெரிவிப்போர் சிறிதரன் தலைவராக வருவாராயின் கட்சியை புதியதொரு வேகத்துடன் கொண்டு செல்ல முடியுமென்றும், பொது மக்கள் மற்றும் கட்சி ஆதரவாளர்களுக்கிடையிலான உறவையும் தொடர்புகளையும் சிறந்த முறையில் கொண்டு செல்ல முடியுமென்றும், கருதுவதாக சொல்லப்படுகிறது.

அத்துடன் விடுதலைப்புலிகளின் ஆதரவுடனும் ஆலோசனையுடனும் உருவாக்கப்பட்ட தமித்தேசியக்கூட்டமைப்பு தற்போது சிதைந்து போயுள்ளது. உடைந்துபோன கட்சிகளை மீண்டும் ஒன்றுபட வைத்து சர்வதேச ரீதியில் பிரபல்யம் பெற்றுக் காணப்படும் கூட்டமைப்பின் ஒற்றுமையை மீளக்கட்டி எழுப்பி கூட்டமைப்புக்கு ஒரு புதிய இரத்தத்தை பாய்ச்ச முடியும் என்ற கருத்துக் கொண்டவர்களாகவே சிறிதரனின் ஆதரவாளர்கள் காணப்படுகிறார்கள். எதிர்பார்ப்பு கொண்டவர்களாக இருக்கிறார்கள்.

இந்த எதிர்பார்ப்புக்கு அப்பால் கூட்டமைப்புக்குள் இருந்து பிரிந்துபோன கட்சிகளான தமிழர் விடுதலைக்கூட்டணி மற்றும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ், சுரேஸ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அகியவற்றையும்உள்வாங்கிகூட்டமைப்பை ஒரு பல கட்சிக் கூட்டாக பலப்படுத்தும் வாய்ப்பை ஏற்படுத்த முடிவதுடன் தமிழ்த் தேசியம் என்னும் கொள்கைக்கு பலமான ஒரு கட்டமைப்பை உருவாக்க முடியுமென நம்பப்படுகிறது.

மொழிப்புலமையும் சட்ட வல்லமையும் கொண்டவர் சுமந்திரன். தேசிய அரசியல் தலைவர்களுடன் நல்லுறவை பேணிவருபவரும் அவரே. எனவே சுமந்திரன் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவாராக இருந்தால் தேசிய ரீதியாக கட்சியை முன்னெடுத்து செல்ல உதவுவதுடன் சட்ட வல்லுனரான ஒருவர் கட்சிக்கு தலைமை தாங்குவது உள்நாட்டு அளவிலும் சர்வதேச ரீதியிலும் பலம் கொண்டதாக காணப்படும் என்ற கருத்தை முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள். சுமந்திரன் ஆதரவாளர்கள்.

ஆங்கிலப்புலமை கொண்டவர், சட்ட வல்லமை கொண்டவர் சுமந்திரன் என்ற கருத்து முன்வைக்கப்படும் நிலையில், இதற்கு பதில் அளித்துள்ள சிறிதரன் ஆங்கிலப் புலமையும் சட்ட அறிவும் அவசியமென்றால் தந்தை செல்வநாயகம் மற்றும் தமிழ்க் காங்கிரஸின் மூத்த தலைவரும் தலைசிறந்த சட்டத்தரணியுமான ஜி.ஜி. பொன்னம்பலம் ஆகியோர் காலத்தில் தமிழ் மக்கள் விடுதலை பெற்றிருக்கவேண்டும். அரசியல் தீர்வு கிடைத்திருக்கவேண்டும். ஆனால் அது நடை பெறவில்லை என்று தர்க்கித்துள்ளார் சிறிதரன்.

சுமந்திரன் சட்ட வல்லமை பிற மொழித்திறன் கொண்டவராக இருந்தாலும் அவர் மீது வைக்கப்படும் குற்றங்கள் அவருக்குரிய தலைமைத்துவப்பண்பை தூக்கி எறிவதாகவே காணப்படுகிறது. மக்களோடு அவருக்குள்ள தொடர்பும், இணக்கமும் குறித்து கேள்வி எழுகிறது. உயர்குழாம் அரசியல் போக்கை கடைப்பிடிக்கும் சுமந்திரன் கட்சி தலைமைக்கு ஏற்புடையவர் அல்லர் என்ற கருத்துடன் தலைநகர் கொழும்பில் இருந்துகொண்டு அரசியல்வாதியாகவே அவர் செயல்படுவதுடன் தமிழ்த்தேசியத்தை உதாசீனம் செய்பவராகவும், விடுதலைப்புலிகளை எப்போதும் விமர்சிக்கும் போக்குகொண்டவராக மாத்திரமல்ல, போர் காலத்தில் விடுதலைப்புலிகளும் போர்க்குற்றம் செய்திருக்கிறார்கள், மனிதவுரிமை மீறல்களை நடத்தியிருக்கிறார்கள், அவர்களும் சர்வதேச நீதிமன்றின் முன் நிறுத்தி விசாரிக்கப்படவேண்டும் என ஒரு கருங்காலித்தனமான அரசியல் பேசும் விற்பனராக காணப்படுபவர் என்ற விமர்சனம் அவர் மீது தொடர்ந்து வைக்கப்பட்டு வரும் நிலையில், இலங்கையின் தமிழரசுக்கட்சியின் தலைவராக ஏற்றுக் கொள்வது பொருத்தமுடையதாக இருக்குமா என கட்சியின் ஆதரவாளர்களால் ஆராயப்பட்டு வருகிறது.

இது ஒருபுறமிருக்க 2022 - 2023 காலப்பகுதியில் திருகோணமலையில் திரு.குகதாசன் தலைமையில் இடம்பெற்ற வட்டாரக்கிளைகளின் தெரிவு மற்றும் மாவட்ட கிளைத்தெரிவின்போது பணம் பரிமாறப்பட்டுள்ளது. உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டே தெரிவுகள் இடம்பெற்றுள்ளது. சில வட்டாரக் கிளைகளின் முக்கிய பதவிகளுக்கு மாற்றுக் கட்சியை சேர்ந்தவர்கள் உள்வாங்கப் பட்டிருக்கிறார்கள். இது கட்சியின் வரலாற்றை பொறுத்தவரை ஒருகாலமும் இடம்பெறாத முறைகேடு மாத்திரமல்ல, ஊழல் மற்றும் குளறுபடிகள் நிறைந்த ஒரு கட்சியாக தமிழரசுக்கட்சி மாறிக் கொண்டிருக்கிறது.

எனவே திருமலை கிளைகள் அனைத்தும் கலைக்கப்பட்டு நடந்த தவறுகள் சீர் செய்யப்பட்டதன் பின்பே மகாநாடு திருகோணமலையில் நடத்தப்படவேண்டு மென்ற கோரிக்கையை சம்பந்தன் தலைவர் மாவை சேனாதிராஜா உட்பட கட்சிப் பிரமுகர்களுக்கு எழுதியுள்ளார். இவை பத்திரிகைகளிலும் சமூக ஊடகங்களிலும் வெளிப்படையாகவே வெளிவந்துள்ளது.

மன்னாரில் இடம்பெற்ற மத்திய குழுக்கூட்டத்தின்போது (19.03.2023) திருகோணமலையில் நடந்த முறைகேடுகளை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தலைமையில் விசாரணை குழு ஒன்று நியமிக்கப்பட்டபோதும் அக்குழு காலத்தை கடத்தியதே தவிர உரிய காலத்தில் விசாரணைகளை மேற்கொள்ளவில்லை என சம்பந்தன் தரப்பினர் குற்றம் சாட்டியிருந்தனர். இருந்தபோதிலும் கடந்த 17.12.2024 திகதியன்று ஒப்புக்கு ஒரு விசாரணை நடத்தப்பட்டதே தவிர அந்த முடிவும் உரிய அறிக்கையாக சமர்ப்பிக்கப்படவில்லை என்பது இன்னொரு குற்றச்சாட்டு.

கடந்த 10 ஆம் திகதி அரசியல் குழு (10.01.2024) கொழும்பில் கூட்டப்பட்டு இருவிடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது. ஒன்று நடப்பு நிர்வாகத்துக்கான தலைவர் தெரிவில் ஏற்பட்டிருக்கும் போட்டி நிலையை தவிர்த்துக் கொள்வதற்கான உடன்பாட்டை காணல். இரண்டாவது விடயம் திருகோணமலையில் ஏற்பட்ட குளறுபடிகளுக்கு என்ன பரிகாரத்தை காணுதல் என்ற இருவிடயங்கள் பிரதானமாக ஆராயப்பட்டபோதும், தலைவர் தெரிவு விவகாரத்தில் சுமந்திரனோ அல்லது சிறிதரனோ ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்காத நிலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி கட்சி யாப்பின்படி தலைவர் பதவிக்கான தேர்தல் நடத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக்கட்சி வரலாற்றில் தலைவர் பதவிக்கான போட்டி எப்பொழுதும் இடம்பெறவில்லை என்றும் முதல் தடவையாக சிறிதரனா, சுமந்திரனா? என்ற கடும் போட்டியொன்று ஏற்பட்டிருப்பதாகவும் இதனால் கட்சியின் எதிர்கால போக்கில் பல்வேறு வெடிப்புக்கள், குழப்பங்கள், விரிசல்கள் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அரசியல் விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். இந்தப் போட்டியில் சுமந்திரன் வெற்றி பெறுவாராயின் சிறிதரனும் அவரது ஆதரவாளர்களும், எடுக்கப்போகின்ற முடிவு என்னவாக இருக்கும், மாறு நிலையாக சிறிதரன் தலைவராக தெரிவு செய்யப்படுவாராயின் சுமந்திரன் என்ன முடிவை எடுப்பார் என்ற கேள்வி மக்கள் மத்தியில் சலசலப்படைந்து காணப்படுகிறது.

**திருமலை நவம்**

# ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை ஏன் நிறுத்தவேண்டும்?



அண்மையில் கோண்டாவில் உப்புமடச் சந்தியில், ஒரு சமகால கருத்தரங்கு இடம்பெற்றது. தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் அக் கருத்தரங்கை ஒழுங்குபடுத்தியது. அதற்குத் தலைமை தாங்கிய ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர் சொன்னார். தனக்கு தெரிந்த பலர் ஒரு வேளை உணவை, குறிப்பாக காலை உணவைத் தவிர்ப்பதாக. காலை உணவைக் கட்டாயம் எடுக்க வேண்டும், இரவு உணவைத் தவிர்க்கலாம் என்று தான் ஆலோசனை கூறியபோது, அவர்கள் சொன்னார்களாம், காலை சாப்பிடாவிட்டால் அன்றைய அலுவல்களில் மூழ்கும்போது பசி தெரியாது. ஆனால் இரவு சாப்பிடாவிட்டால் பசி தெரியும் நித்திரை வராது என்று. இதுதான் பெரும்பாலான கீழ் மத்தியதர வர்க்க குடும்பங்களின் நிலைமை. ஆண்டு இறுதியில் இதுதான் நிலைமை என்றால் தை பிறந்தாலும் வழி பிறக்குமா? சாதாரண மக்களுக்கு வழி பிறக்குமோ இல்லையோ, அரசியல்வாதிகள் அதிகாரத்தைச் சுவைப்பதற்கான புதிய வழிகளைத் தேடித் திறக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ரணில் விக்கிரமசிங்கவை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற வைப்பதற்காகப் புதிய கூட்டணி ஒன்றை நோக்கி ஒரு புதிய அலுவலகம் கடந்த முதலாம் திகதி ராஜகிரியவில் திறந்து வைக்கப்பட்டது.அதே நாளில், மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினராகிய ஷான் விஜயலால் டி சில்வா எதிரணியோடு அதாவது ஐக்கிய மக்கள் சக்தியோடு இணைந்து கொண்டார். இவர் தென்மாகாண சபையின் முதலமைச்சராக இருந்தவர். அவர் எதிரணியில் இணைந்து கொண்டதன் மூலம் எதிரணி தானும் பலமடைவதான ஒரு தோற்றத்தைக் கட்டியெழுப்ப முயற்சிக்கின்றது.

அதாவது, புதிய ஆண்டு அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான தயாரிப்புகளோடு பிறந்திருக்கிறது என்று பொருள். மக்கள் சாப்பாட்டுக்கு வழி இல்லாமல் இருக்கலாம்.மரக்கறிகளின் விலை வாங்க முடியாத அளவுக்கு உயர்ந்து போகலாம். வரியானது மக்களை ஈவிரக்கமின்றிக் கசக்கிப்பிழியலாம். மோட்டார் சைக்கிள் ஒரு லக்சறிப் பொருளாக மாறலாம். ஆனால் அரசியல்வாதிகளின் அதிகாரப்பசி குறையப் போவதில்லை என்பதைத்தான் ஆண்டின் தொடக்கம் நமக்கு உணர்த்துகின்றது.

இவ்வாறு தென்னிலங்கையில் ஒரு ஜனாதிபதி தேர்தலை நோக்கி பிரதான கட்சிகள் ஏற்கனவே உழைக்க தொடங்கி விட்டிருக்கும் ஒரு பின்னணியில், தமிழ்த்தரப்பு என்ன செய்து கொண்டிருக்கிறது? ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக முதலில் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது குத்துவிளக்கு கூட்டணிதான். சில மாதங்களுக்கு முன் கூட்டணியின் கூட்டம் மன்னாரில் நடந்த பொழுது ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை ஜனாதிபதி தேர்தலில் நிறுத்துவது என்று அக்கூட்டு முடிவெடுத்தது. அந்த முடிவை வலியுறுத்தி கூட்டுக்குள் அங்கம் வகிக்கும் சுரேஷ் பிரேமச்சந்திரன் அவ்வப்போது கருத்து தெரிவித்து வருகிறார். சுரேஷ் அவ்வாறு கருத்து தெரிவித்த பின் அண்மையில் விக்னேஸ்வரன் அதற்கு ஆதரவாக கருத்துத் தெரிவித்திருந்தார். ஒரு தமிழ் பொது வேட்பாளராகத் தான் களமிறங்கத் தயார் என்றும் அவர் அறிவித்துவிட்டார். இவ்வாறு விக்னேஸ்வரன் அறிவித்த பின் கஜேந்திரகுமார் அதற்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருந்தார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேர்தலை பகிஷ்கரிக்கும் என்பது அக்கட்சியின் நிலைப்பாடாகும்.

அதே சமயம் தமிழரசுக் கட்சி அதன் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை. அது தன் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் தேர்தலில் மினக்கெடுகின்றது. எனினும் சுமந்திரனுக்கு நெருக்கமான சாணக்கியன் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற தெரிவுக்கும் பகிஷ்கரிப்புக்கும் எதிராகக் கருத்து தெரிவித்திருக்கிறார். தமிழரசுக் கட்சி யாராவது ஒரு சிங்கள வேட்பாளரை நோக்கித் தமிழ் வாக்குகளைத் திருப்பும் நோக்கத்தோடிருந்தால், அக்கட்சி பொது வேட்பாளரை எதிர்க்கும்.

கடந்த 15 ஆண்டுகளில் நடந்த மூன்று ஜனாதிபதி தேர்தலின் போதும் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை வலிமையாக முன்வைத்தது, தமிழ் மக்கள் பேரவையால் உருவாக்கப்பட்ட சுயாதீனக் குழுதான். கடைசியாக நடந்த ஜனாதிபதி தேர்தலையொட்டி உருவாக்கப்பட்ட அக்குழுவின் முயற்சிகள் வெற்றி பெறவில்லை. எனினும், அக்குழு அந்த முடிவை நோக்கி கருத்துருவாக்க வேலைகளைச் செய்தது.

இம்முறை குத்துவிளக்குக் கூட்டணி அந்த முடிவை எடுத்திருக்கின்றது. குத்துவிளக்கு கூட்டணி இந்தியாவுக்கு விசுவாசமான ஒரு கூட்டணியாகப் பார்க்கப்படுகின்றது. இந்தியாவுக்கு ஆதரவான ஒரு கூட்டு என்று கருதப்படும் குத்துவிளக்கு கூட்டணி தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற கருத்தை கையில் எடுத்ததனால் அது இந்தியாவின் வேலையோ என்ற சந்தேகம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஏற்பட்டிருக்கலாம்.

முதலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை ஏன் நிறுத்த வேண்டும் என்று பார்ப்போம்.

ஒரு தமிழ் பொது வேட்பாளர் நிச்சயமாகவெல்லப்போவதில்லை. ஆனால் அவர் பிரதான சிங்கள வேட்பாளர்களின் வெற்றிகளை சவால்களுக்கு உட்படுத்துவார். எப்படியென்றால், ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி தமிழ் கட்சிகள் கடுமையாக உழைத்தால், தமிழ் வாக்குகள் பெருமளவுக்கு அவருக்குத்தான் விழும். அப்படி விழுந்தால், பிரதான சிங்கள வேட்பாளர்களுக்கும் 50 வீதத்துக்கு மேலான வாக்குகள் கிடைக்காமல் போகக்கூடும். இம்முறை இரண்டுக்கு மேற்பட்ட சிங்கள வேட்பாளர்கள் அரங்கில் காணப்படுகின்றார்கள். அதாவது சிங்கள வாக்குகளே சிதறும் ஒரு நிலைமை. இதில் தமிழ் வாக்குகள் கிடைக்காவிட்டால், எவருக்குமே முதற் சுற்று வாக்கு கணக்கெடுப்பில் வெற்றி கிடைக்காமல் போகலாம்.அப்பொழுது இரண்டாவது சுற்று வாக்கு கணக்கெடுப்புக்கு போக வேண்டிவரும். அதில் தமிழ் மக்கள் யாருக்கு தமது இரண்டாவது விருப்பு வாக்கை வழங்குகிறார்களோ அவரே வெற்றி பெறுவார். அதாவது யார் ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதனை தமிழர்கள் தீர்மானிக்கக்கூடிய பேர வாய்ப்பைப் பரிசோதிக்கும் ஒரு முயற்சியே அது.

பிரதானசிங்களவேட்பாளர்களுக்கு தமிழ் வாக்குகள் கிடைக்காது என்றால், அவர்கள் தமிழ்த் தரப்போடு பேரம்பேச வருவார்கள். அப்பொழுது தமிழ் மக்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளும் ஒருவருக்கு தமிழ் மக்கள் தமது இரண்டாவது விருப்பு வாக்கை அளிக்கலாம். அதாவது தமிழ் வாக்குகளை ஒரு சிங்கள வேட்பாளருக்கு "பிளாங்க் செக்"காக வழங்குவதற்கு பதிலாக பேர வாய்ப்பாக அதைப் பயன்படுத்துவது.

ஆனால் இதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் தமிழ் மக்களோடு வெளிப்படையான ஓர் உடன்பாட்டுக்கு வரும் சிங்கள வேட்பாளர் தென்னிலங்கையில் தோற்கடிக்கப்படும் ஆபத்து அதிகமுண்டு என்பதுதான். அதனால் எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் தமிழ் மக்களோடு பேரம்பேசத் தயங்குவார். ஆனால் அது கூட தமிழ் மக்கள் வெளி உலகத்துக்கு ஒரு உண்மையைச் சொல்வதற்குரிய வாய்ப்பை உருவாக்கும். அது என்னவெனில், சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் யாருமே இனப்பிரச்சினை தொடர்பில் தமிழ் மக்களுக்கு வெளிப்படையான வாக்குறுதிகளை வழங்கத் தயாரில்லை என்பதுதான்.

எனவே ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ் மக்களுக்கு உள்ள பேர வாய்ப்புகளை பரிசோதிக்கலாமோ இல்லையோ, தமிழ் மக்களின் மக்கள் ஆணையை புதுப்பிப்பதற்கு உதவுவார். அவர் தமிழ் மக்களின் உச்சபட்ச கோரிக்கைகளை முன்வைத்து தமிழ் வாக்குகளைக் கேட்பார். தேர்தல் என்று வந்தால் அது ஒரு ஜனநாயகக் கொண்டாட்டம். அங்கே கட்சிகளுக்கு புது ரத்தம் பாய்ச்சப்படும். கட்சித் தொண்டர்கள் உற்சாகமாக இறங்கி வேலை செய்வார்கள். கிராமங்கள் தோறும் கட்சி அலுவலகங்கள் திறக்கப்படும். கிராம மட்டத்தில் கட்சி வலையமைப்புகள் பலப்படுத்தப்படும். ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி எல்லா கட்சிகளும் அவ்வாறு உழைக்கும் பொழுது, அது தமிழ் மக்களை ஆகக்கூடிய பட்சம் ஒரு தேசமாகத் திரட்டும்.

ஏற்கனவே கடந்த 15 ஆண்டுகளிலும் நடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தலின் போதும் தமிழ் மக்கள் ராஜபக்சக்களுக்கு எதிராகத் திரளாக வாக்களித்து இருக்கிறார்கள்.அவ்வாறு ஒரு சிங்கள வேட்பாளருக்கு எதிராக விழும் வாக்குகளை தமிழ் மக்கள் ஆணைக்கான வாக்குகளாக மாற்றினால் என்ன?

கஜேந்திரகுமார் கூறுகிறார், ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் இறுதியாக யாராவது ஒரு சிங்கள வேட்பாளரை ஆதரிப்பார் என்பதனால் அந்தத் தெரிவை தாம் ஏற்கவில்லை என்று. மேலும் ஒற்றை ஆட்சிக்குள் ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ளும் கட்சிகள் அவ்வாறு ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த முயற்சிப்பதாக அவர் குற்றம் சாட்டுகிறார்.

ஆனால் இங்கு ஏற்கனவே பார்த்ததுபோல, பிரதான சிங்கள வேட்பாளரோடு பேரம் பேசக்கூடிய நிலைமைகள் குறைவாக இருக்குமென்றால், அதை தமிழ் மக்களின் ஆகப்பிந்திய ஆணையைப் பெறுவதற்கான ஒரு மறைமுக வாக்கெடுப்பாக தமிழ் மக்கள் பயன்படுத்தலாம். தமது உச்சமான கோரிக்கைகளை முன்வைத்து அதற்கு மக்கள் வாக்களித்திருக்கிறார்கள் என்பதனை வெளியுலகத்துக்கு எடுத்துக் கூறலாம்.

இந்த கோரிக்கையை முன்வைப்பது சுரேஷ் பிரேமச்சந்திரன் அல்லது குத்து விளக்கு கூட்டணி அல்லது விக்னேஸ்வரன் என்பதற்காக அதனை எதிர்க்கத் தேவையில்லை. அது தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டும் வாய்ப்புகளை அதிகப்படுத்தும் என்ற அடிப்படையிலாவது அதைப் பரிசோதிக்கலாம்.

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் ரணில், சஜித் உட்பட எல்லா சிங்கள வேட்பாளர்களையும் சவால்களுக்கு உட்படுத்துவார். அவர்களை தமிழர்களை நோக்கி வரச்செய்வார்.அல்லது அவர்கள் தமிழர்களுக்கு எதிரான வெளிப்படையான நிலைப்பாட்டை எடுக்கக்கூடிய நிலைமைகளை ஏற்படுத்துவார். அதாவது சிங்கள வேட்பாளர்களை அம்பலப்படுத்துவார். ஆனால் இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக, அவர் தமிழ் மக்களின் ஆகப் பிந்திய மக்கள் ஆணையை வெளிக்கொண்டு வருவார். தமிழ் மக்களை ஐக்கியப்படுத்துவார். அந்த ஐக்கியத்துக்கு தகுதியானவர்கள் தலைமை தாங்கலாம்.

ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர் கட்டாயமாக விக்னேஸ்வரனாகத்தான் இருக்க வேண்டும் என்றில்லை. கிழக்கிலிருந்து ஒருவரைத் தெரிவு செய்தால் அது மிகச்சிறப்பு. ஒரு பெண்ணாக இருந்தால் அதுவும் சிறப்பு. அவர் ஒரு குறியீடு. கட்சிகளாக, வடக்குக் கிழக்காக, சமயங்களாக, சாதிகளாக, ஒரே கட்சிக்குள் இருவேறு குழுக்களாக, முகநூல் குழுக்களாக, சிதறிக்கிடக்கும் ஒரு சமூகத்தை, ஒரு தேர்தலை நோக்கியாவது ஆகக்கூடிய பட்சம் ஒரு தேசமாகத் திரட்ட அவருக்கு வாய்ப்பளித்தால் என்ன?

**நிலாந்தன்**

# தமிழ் மக்களின் அரசியல் இலக்கும் வழிவரைபடமும்



தமிழர்களுக்கான அரசியல் தீர்வானது கோட்பாட்டு அடிப்படையில் தேச அங்கீகாரம், இறைமை அங்கீகாரம், சுயநிர்ணய உரிமை அங்கீகாரம், சுயநிர்ணய உரிமையை நடைமுறைப்படுத்தக் கூடிய ஆட்சிப் பொறிமுறை என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். எனவே வடக்கு - கிழக்கு இணைந்த அதிகார அலகு, சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கக்கூடிய சுயாட்சி அதிகாரங்கள், மத்திய அரசில் ஒரு தேச பங்குபற்றுவதற்கான பொறிமுறை, சுயாட்சி அதிகாரங்களுக்கான பாதுகாப்பு என்பவற்றை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக புதிய அரசியல் யாப்பில் உள்ளடக்கவேண்டும். அவ்வாறான உள்ளடக்க விடயங்களின் தார்ப்பரியம் என்ன? தடைகள் என்ன? தீர்வுக்கான மூலோபாயங்கள் எவை? வடக்கு - கிழக்கு இணைப்பால் உருவாகும் கூட்டடையாளம் அவசியமா?, தீர்விற்கான வழிவரைபடம் என்பன போன்ற கேள்விகள் எழும் பரப்புகளை ஆழமாகவும், விசாலமாகவும் அரசியல் விஞ்ஞானக் கோட்பாடுகளின் வழியே 'தமிழ் அரசியல் இலக்கும் வழி வரைபடமும்' என்ற இந்தக் கட்டுரைத்தொடர் ஆய்வு செய்கின்றது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு பற்றிய உரையாடலும் மேலெழுந்திருக்கின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்கு மக்களுக்கு அரசியல் தீர்வு தேவை என்ற கருத்தை தனது முதலாவது கொள்கை விளக்க உரையில் கூறியிருக்கின்றார். தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கவேண்டு மென்றால் அரசியல் ஸ்திரநிலையைக் கொண்டுவரவேண்டும். இனப் பிரச்சினையைத் தீர்க்காமல் அரசியல் ஸ்திர நிலையையும் உருவாக்க முடியாது.

பிராந்திய வல்லரசான இந்தியா 13 ஆவது திருத்தத்தையே அரசியல் தீர்வாக முன்வைக்க முனைகின்றது. சிங்கள தேசத்திலுள்ள பெரும் தேசியவாதத்தின் லிபரல் பிரிவும் இதனையே ஆதரிக்க முற்படுகின்றது. அமெரிக்கா தலைமையிலான மேற்குலகம் இது விடயத்தில் இந்தியாவிற்கு பின்னாலேயே நிற்கமுனைகின்றது.

13 ஆவது திருத்தம் ஒற்றையாட்சிக்குட்பட்ட, சுயாதீன மில்லாத மாகாணசபை முறையை சிபார்சு செய்வதால் அது அரசியல் தீர்வின் ஆரம்பப் புள்ளியாகக் கூட இருக்கப்போவதில்லை. இந்த நிலையில் தமிழ் மக்களுக்கான அரசியல் இலக்கும் வழிவரைபடமும் எவ்வாறு இருக்க வேண்டும் என்ற உரையாடல் இன்றைய சூழலில் அவசியமாகின்றது. இக் கட்டுரையாளர் இதுபற்றி தன்னுடைய கருத்துக்களை முன்வைக்கின்றார். இக் கருத்துக்கள் முடிந்த முடிவுகளல்ல. இவை அனைத்தும் பரிசோதனைகளுக்கும் கலந்துரையாடல்களுக்கும் உரியவை.

முதலில் தமிழ் மக்களுக்கான அரசியல் இலக்கு எதுவாக இருக்க வேண்டும் என்பதைப் பார்ப்போம். இதற்கு இனப்பிரச்சினை என்றால் என்ன? என்பது பற்றி போதிய தெளிவு அவசியமானதாகும். இனப்பிரச்சினை என்பது தமிழ் மக்கள் ஒரு தேசமாக அல்லது தேசிய இனமாக இருப்பது அழிக்கப்படுவதே! அதாவது தேசம் அல்லது தேசிய இனத்தின் தூண்களாக இருக்கின்ற நிலம், மொழி, பொருளாதாரம், கலாச்சாரம், மக்கள் கூட்டம் என்பன அழிக்கப்படுவதே! இலங்கைத் தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியது என்ற சிங்கள மக்களின் ஏகோபித்த கருத்து நிலையை நடைமுறைப்படுத்துவதற்காகவே அவை அழிக்கப்படுகின்றன. ஒற்றையாட்சிக் கட்டமைப்பும் அதனூடாக சிங்கள மக்களிடம் மட்டும் உள்ள அரசியல் அதிகாரமும் இவ்வழிப்புக்கு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

எனவே தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது இவ்வழிப்பிலிருந்து பாதுகாப்பதாக இருக்க வேண்டும். அதற்கு கோட்பாட்டு ரீதியாக தமிழ் மக்களை ஒரு தேசமாக அல்லது தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும். தமிழ் மக்களின் இறைமையும் அதன் அடிப்படையிலான சுயநிர்ணய உரிமையும் அங்கீகரிக்கப்பட வேண்டும். இச்சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிப்பதற்கான அரச அதிகாரக் கட்டமைப்பு உருவாக்கப்படல் வேண்டும். இக்கட்டமைப்பு உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஸ்டிக் கட்டமைப்பாக இருத்தல் வேண்டும்.

அரசியல் தீர்விற்கு அரசியல் யாப்புச்சட்டவடிவம் கொடுக்கின்றபோது அதில் முதலாவதாக தமிழ் மக்களின் கூட்டிருப்பையும், கூட்டுரிமையையும், கூட்டடையாளத்தையும் பேணக் கூடிய வகையில் வடக்கு - கிழக்கு இணைந்த அதிகார அலகு உருவாக்கப்படல் வேண்டும். இதில் எந்த விட்டுக் கொடுப்பையும் மேற்கொள்ள முடியாது. இதில் முஸ்லீம் மக்களின் நிலை என்ன என்பது தொடர்பாக அவர்களுடன் பேசித் தீர்க்கலாம். அவர்களது தனி அதிகார அலகுக் கோரிக்கையையும் சாதகமாகப் பரிசீலிக்கலாம். முஸ்லீம்கள் சம்மதிக்கவில்லையாயின் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ்ப் பிரதேசங்களை நிலத் தொடர்ச்சியற்ற வகையிலாவது இணைத்து இவ்வதிகார அலகினை உருவாக்குதல் வேண்டும். முஸ்லீம்கள் இணங்கவில்லை என்பதற்காக இணைப்பைக் கைவிடுவதற்கு அரசியல் தலைமைகளுக்கு எந்த உரிமையும் கிடையாது. துரதிஷ்டவசமாக இந்த மாற்று யோசனை பற்றிய உரையாடலுக்குக் கூட சம்பந்தன் தலைமை இன்னமும் தயாராகவில்லை. அவர்கள் எப்படியாவது வடக்கு, கிழக்கு பிரிப்பை நடைமுறைப்படுத்துவதற்கே முயற்சிக்கின்றனர்.

இது விடயத்தில் "தமிழ் பேசும் மக்கள்" என்ற செல்லரித்துப் போன கருத்து நிலை துளிகூட உதவப்போவதில்லை. இக்கருத்து நிலை முஸ்லீம் அரசியலைக் கொச்சைப்படுத்துகின்றது. முஸ்லீம்கள் இக்கருத்து நிலைக்குள் வருவதற்கு தயாராக இல்லை என்பதை வரலாற்று ரீதியாகவே வெளிப்படுத்தியுள்ளனர். மாறாக மதத்தை அடிப்படையாகக் கொண்ட தனியான இனமாகவே தங்களை வெளிப்படுத்த முனைகின்றனர். மறுபக்கத்தில் இக்கருத்து நிலை தமிழ் அரசியலுக்கு கைவிலங்காகி குறிப்பாக கிழக்கு தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களைக் கட்டிப்போடுகின்றது. தமிழ் மக்களுக்குப் பொறுப்பையும் முஸ்லீம் மக்களுக்கு பொறுப்பின்மையையும் விதிக்கின்றது.

இரண்டாவது சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கக்கூடிய அதிகாரங்கள் அரசியல் யாப்புச் சட்டவரைபில் தெளிவாக உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும். தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற வகையில் இதற்கு பிறப்பாலேயே உரித்துடையவர்கள் என்பதற்கப்பால் 100 வருடங்களுக்கு மேற்பட்ட இன அழிப்பினால் தமிழ் மக்கள் ஐம்பது வருடங்கள் பின்தங்கி நிற்கின்றனர். இந்த இடைவெளியை நிரப்புவதற்கும் இவ்வதிகாரங்கள் தேவையானதாகும்.

மூன்றாவது மத்திய அரசில் ஒரு தேசிய இனமாக பங்குகொள்வதற்கான வாய்ப்பு வழங்கப்படல் வேண்டும். மத்திய அரசின் அதிகாரக்கட்டமைப்பு பன்மைத் தன்மை வாய்ந்ததாக இருக்கும் போதே இது சாத்தியமாக இருக்கும். மத்திய அரசினை சிங்கள பௌத்த அரசாக வைத்துக்கொண்டு எந்த அதிகாரப்பகிர்வை வழங்கினாலும் அவை ஒருபோதும் நடைமுறைக்கு வரப்போவதில்லை.

நான்காவது அதிகாரங்களுக்கான பாதுகாப்பு. தமிழ் மக்கள் தொடர்பான விடயங்களில் தமிழ் மக்களின் அனுமதியில்லாமல் சட்ட நிர்வாக நடவடிக்கைகளை எடுக்க முடியாத பொறிமுறைகள் உருவாக்கப்படல் வேண்டும். தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தடுப்பதற்கு மட்டுமல்ல, தமிழ் மக்களுக்குத் தேவையான விடயங்களைக் கொண்டுவருவதற்கும் பொறிமுறைகள் இருத்தல் வேண்டும். தமிழ் மாநில அரசின் சம்மதம், இரட்டை வாக்கெடுப்பு முறை போன்ற பொறிமுறைகளை இதற்குப் பயன்படுத்தலாம்.

இனி இந்த இலக்கினை அடைவதற்கான வழிவரைபடத்தைப் பார்ப்போம். இந்த வழிவரைபடத்தில் அடங்கவேண்டிய முதலாவது விடயம் தமிழ் மக்களினது அரசியல் இலக்கிற்கான நியாயப்பாடுகளை புலமை ரீதியிலும், தர்க்க ரீதியாகவும் தொகுத்து தாயக மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் பேசுபொருளாக்குவதாகும். துரதிஷ்டவசமாக தமிழ் அரசியல், ஆயுதப் போராட்ட ரீதியாக வளர்ந்த அளவிற்கு அரசியல் புலமை ரீதியாக வளரவில்லை அதாவது தமிழ் அரசியல் நியாயப்பாடுகளுக்கு போதியளவு புலமைப்பின்பலம் கொடுக்கப்படவில்லை. இதனால் தான் தமிழ் அரசியல் தலைவர்கள் பலரும், தமிழ் ஊடகவியலாளர்கள் பலரும் தமிழ் மக்களை "சிறுபான்மை இனம்" என விளிக்கின்றனர். தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மை இனம் என்றால் அவர்களுக்கு சோல்பரி யாப்பின் 29 ஆவது பிரிவு போதுமே! எதற்கு சமஸ்டியும் தனிநாடும். தவிர இனப்பிரச்சினை என்றால் என்ன? என்ற தெளிவு தமிழ் அரசியல் தலைவர்களுக்கு கூட போதியளவு இல்லை. மக்களுக்கு அறவே இல்லை எனக் கூறலாம். இந்தத் தொகுப்பில் இன அழிப்பின் வரலாறு, தமிழ் மக்களின் போராட்ட வரலாறு, தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வின் உள்ளடக்கம், அதற்கான நியாயப்பாடுகள், இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான சர்வதேச அனுபவங்கள் என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.

இரண்டாவது தமிழ் மக்களினது அனைத்து விவகாரங்களையும் உலகம் தழுவிய வகையில் கையாளக்கூடிய தேசிய அரசியல் இயக்கம் ஒன்றைக் கட்டியெழுப்புதலாகும். தமிழ் மக்களுக்கு இன்று தேவையானது தேர்தல்களில் கூத்தடிக்கும் அரசியல் கட்சிகளல்ல. மாறாக மேற்கூறிய தேசிய அரசியல் இயக்கமே! இந்த அரசியல் இயக்கம் மக்கள் அமைப்புக்களையும் அரசியல் கட்சிகளையும் கொண்டதாக இருக்கலாம், ஆனால் மக்கள் அமைப்புக்களே மேலாதிக்கம் செலுத்துவதாக இருத்தல் வேண்டும். இந்தத் தேசிய அரசியல் இயக்கம் அதில் இணைந்து கொண்ட மக்கள் அமைப்புக்கள் ஐக்கிய முன்னணிக்குள் வருகின்றபோதும், அரசியல் கட்சிகள் ஐக்கிய முன்னணிக்குள் வருகின்றபோதும் தான் பலமாக இருக்கும்.

12ஆம் பக்கம் பார்க்க...

சி.அ.யோதிலிங்கம்



# மீளுருவாக்கப்பட்ட ஆரியகுளமும் ஆரியச்சக்கரவர்த்திகளும்

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வெளிவந்த தமிழ் ஊடகங்கள் தூரநோக்குடன் தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்தும் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் அனைவரும் முன்வரவேண்டும் என்ற வேண்டுதலை முன்னெடுத்து வந்திருந்திருப்பதைக் காணமுடிகின்றது. அவ்வேண்டுதலில் ஒன்றை நிறைவு செய்திருக்கும் அரிய வரலாற்றுப் பணியாகவே யாழ்ப்பாண மாநகர சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ள ஆரியகுளம் மீள்புனரமைப்புப் பணியைப் பார்க்கின்றோம். இது யாழ்ப்பாண நகரை அழகுபடுத்தும் இயற்கை சார்ந்த மரபுரிமைச் சின்னம் என்பதற்கு அப்பால் அது யாழ்ப்பாண அரசுகால வரலாற்றையும், பண்பாட்டையும் நினைவுபடுத்திக்காட்டும் மரபுரிமைச் சின்னம் என அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது. ஆரியகுளத்தை யாழ்ப்பாண அரசுடனும், அதன் ஆட்சியாளருடனும் தொடர்புபடுத்திக் கூறும் போது ஆரியகுளம் என்ற பெயர் எவ்வாறு வந்தது, எப்போது வந்தது, எந்த மன்னன் காலத்திற்கு உரியது, இக்குளம் யாருக்குச் சொந்தமானது? என்பன தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களும், பல கேள்விகளும் மக்களிடமும், வரலாற்று ஆர்வலர்களிடமும் நீண்டகாலமாக இருந்து வருவதை நாம் அறிவோம். அதுவும் இக்குளத்தின் மீளுருவாக்கப் பணி தொடங்கிய காலத்தில் இருந்து இவ்வாறான கேள்விகள் ஊடகங்கள் பலவற்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு வந்ததையும் காணமுடிகின்றது. இந்த வரலாற்று மயக்கத்திற்கு ஆரியகுளம் என்பதன் முன்னொட்டுச் சொல்லாக வரும் "ஆரிய(ர்)" என்ற சொல் பயன்பாட்டிலிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். இதற்கு கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் பொருத்தமான பதிலையும், விளக்கத்தையும் வழங்கியிருந்ததுடன் இதையிட்டு வரலாற்று ஆசிரியர்கள் மௌனமாக இருக்கிறார்கள் என்ற தனது நியாயமான ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். அவரின் கருத்திற்கு மேலும் நம்பகரமான சான்றுகளையும், விளக்கங்களையும் எடுத்துக்கூறுவதே இச்சிறுகட்டுரையின் நோக்கமாகும்.

## ஆரியச்சக்கரவர்த்திகளும் ஆரியகுளமும்

தமிழகத்தில் சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி.பி.12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுச்சியடைந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு அதன் சமகாலத்தில் தென்னிலங்கை மீதும், வட இலங்கை மீதும் ஆறு தடவைகளுக்கு மேல் படையெடுத்தது பற்றி அவர்கள் வெளியிட்ட சாசனங்கள் கூறுகின்றன. இப்படையெடுப்புக்களின் தளபதிகளாக இருந்தவர்களே ஆரியச் சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தையும் பெற்றிருந்தனர். இப்பட்டங்களை படைத்தளபதிகள் அல்லது சேனாதிபதிகள் மட்டுமன்றி அரச நிர்வாகத்தில் உயர்பதவிகளில் இருந்தவர்களும் பெற்றிருந்தனர் என்பதனைப் பாண்டியர்காலச் சாசனங்கள் உறுதிசெய்கின்றன. அவற்றுள் இலங்கை மீது படையெடுத்த ஆரியச்சக்கரவர்த்திகள் யார், எந்த நாட்டவர், எந்த அரச வம்சத்திற்கு உரியவர்கள், எந்த மொழிக்குரியவர்கள்? என்பன தொடர்பான கேள்விகளுக்கு விடைகூறுவதாகவே சிங்கள வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான சூளவம்சத்தில் வரும் பின்வரும் கூற்றுக்கள் காணப்படுகின்றன:

**"முன்பு பஞ்சம் ஒன்று நிலவிய காலத்திலே பாண்டிய இராச்சியத்தில் ஆட்சிபுரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திஎன்னும்பெயர்கொண்ட தமிழ்ச் சேனாதிபதியின் தலைமையில் படையொன்றை அனுப்பி வைத்தார்கள். அவன் ஆரியனல்லானாயினும் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கினான். இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்துவிட்டு அரண்கள் பொருந்திய சுபபட்டணத்தினுள் (யாப்பகூவாவிற்குள்) அவன் புகுந்தான். அங்கிருந்த தந்ததாதுவையும், விலைமதிக்க முடியாத செல்வங்களையும் கவர்ந்து கொண்டு ஆரியச்சக்கரவர்த்தி பாண்டிநாட்டுக்குச் சென்றான். அங்கு பாண்டிய மன்னர் குலமெனும் தாமரையை மலர்விக்கின்ற கதிரவனையொத்த குலசேகர மன்னனுக்கு அவற்றைக் கொடுத்தான்".**

மேற்கூறப்பட்ட கூற்றிலிருந்து ஆரியச்சக்கரவர்த்திகள் ஆரியர்கள் அல்லாத தமிழர் என்று கூறப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. தமிழ்ப் பேரகராதியில் ஆரியன் என்ற சொல்லுக்கு தலைவன், பிராமணன் என்ற பொருள்களும் உள்ளன.

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வட இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட இன்னொரு படையெடுப்பு பற்றிய விரிவான செய்திகளை தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியா மலையிலுள்ள 1262ஆம் ஆண்டுக்குரிய பாண்டியரது கல்வெட்டு கூறுகின்றது. அக்கல்வெட்டு, தென்னிலங்கையிலும், வட இலங்கையிலும் இரு அரசுகள் இருந்ததாகவும், சிங்கள அமைச்சன் ஒருவனது வேண்டுதலின் பேரில் பாண்டியர் வட இலங்கை மீது படையெடுத்து ஆட்சியில் இருந்த சாவகனை அடிபணிந்து திறைசெலுத்துமாறு கோரியபோது அதை அவன் ஏற்க மறுத்ததால் அவனைக் கொன்று அவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திவிட்டு இந்த வெற்றியின் நினைவாக தமது அரச இலட்சனையான இரட்டைக்கயல் (மீன்கள்) பொறித்த கொடிகளை கோணாமலையிலும், திரிகூடகிரியிலும் (திருகோணமலையில்) ஏற்றிவிட்டுத் திரும்பியதாகக் கூறுகின்றது. ஆயினும் இந்த வெற்றியைத் தொடர்ந்து தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் சாகவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திய பாண்டியப் படைகளே அவனை அகற்றிவிட்டு கி.பி.13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தனர். இதனால் இவ்வரசு பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு என்றே அழைக்கப்படுகின்றன. இதனால் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த தொடக்ககால மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என்பதை ஒரு வம்சப் பெயராகக் கொண்டு தமது பெயருடன் ஆரியன் என்ற பெயரையும் இணைத்துக்கொண்டனர். இதற்கு உதாரணமாக யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பட்டுள்ள குலசேகர




சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன், குணபூஸண சிங்கை யாரியன், செயவீர சிங்கையாரியன், குணவீர சிங்கையாரியன், கனகசூரிய சிங்கையாரியன் முதலான எட்டு மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடலாம்.

மேலும் ஆரியச்சக்கரவர்த்தி மன்னன் ஒருவன் கம்பளை அரசு மீது படையெடுத்தது பற்றிய தமிழ்க் கல்வெட்டொன்று தென்னிலங்கையில் கொணட்டகம என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டிலும் படையெடுத்த மன்னனை "பொங்கொலிநீர்ச் சிங்கையாரியன்" என்றே கூறப்பட்டுள்ளது. இது மேலும் யாழ்ப்பாண வைபவமாலையில் சொல்லப்பட்ட செய்தியை உறுதிசெய்வதாக உள்ளது. இவ்வாதாரங்கள் யாழ்ப்பாண அரசுகால மன்னர்களின் பெயர்களுடன் ஆரியன் என்ற சொல்லும் இணைந்துள்ளதைக் காட்டுகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகளால் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசைக் காலப்போக்கில் சுதேச மன்னர்களும் ஆட்சி செய்தனர். இவ்வரசு போர்த்துக்கேயரால் வெற்றி கொள்ளப்படும் வரை (1619 இல்) ஏறத்தாழ 350 ஆண்டுகள் சுதந்திர தமிழரசாக ஆட்சியில் இருந்துள்ளது. இவ்வரசின் வரலாற்றை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கைத் தமிழர் பண்பாடு தனித்துவமாக வளர்வதற்கு யாழ்ப்பாண அரசு ஒரு முக்கிய காரணம் எனக் கூறியிருப்பதுடன் அவ்வரசு காலத்தில் தமிழ் மொழி, சைவ சமயம், இலக்கியம், இசை, நடனம், நாடகம், சோதிடம், வைத்தியம், விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம், இராணுவக் கட்டமைப்பு என்பனவும் வளர்சியடைந்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றார். கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த ராஜாவலிய என்ற சிங்கள வரலாற்று இலக்கியம் சமகாலத்தில் ஆட்சியிலிருந்த றைகம, கம்பளை, யாழ்ப்பாண அரசுகள் பற்றிக் குறிப்பிட்டு, அவற்றுள் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசே படைப்பலத்திலும், பொருளாதார வளத்திலும் மேலோங்கி இருந்ததாகவும் அவ்வரசு மலைநாடு தொட்டு தாழ்நிலப் பகுதிவரை ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறை பெற்றதாகவும் கூறுகின்றது.

பொதுவாக ஒரு நாட்டில் அல்லது ஒரு வட்டாரத்தில் ஆட்சிபுரிந்த அரச வம்சங்கள் மற்றும் ஆட்சியாளர்களின் பெயர்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடப்பெயர்களுடனும், அவர்களது வரலாற்றுப் பணிகளுடனும் இணைந்துப் பேசப்படுவதுண்டு. இவ்வரலாற்று நினைவுகள் பிற்காலத்தில் தொடர்ந்ததற்கும், காலப்போக்கில் மறைந்ததற்கும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இவர்கள் இராமேஸ்வரம் சேது தலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்ததால் இவர்கள் சேதுகுலம் எனவும் அழைக்கப்பட்டனர். இச்சேது குலத்தையும், சேது தலத்தையும் நினைவுபடுத்தும் வகையில் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச்சக்கரவர்த்திகள் தாம் வெளியிட்ட நாணயங்களிலும், கல்வெட்டுக்களிலும், அரச கொடிகளிலும் சேதுவை ஒரு மங்கல மொழியாகப் பயன்படுத்தினர். இச்சொல் இன்றும் யாழ்ப்பாண அரசில் ஆட்சிபுரிந்த ஆரியச் சக்கரவர்த்திகளின் முக்கிய வரலாற்று அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது.

மேலும் ஆரியச்சக்கரவர்த்திகள் வாழ்ந்த தென்தமிழகத்தில் அதிலும் குறிப்பாக பாண்டியரின் ஆதிக்கம் நிலவிய இடங்களில் ஆரியகுளம், ஆரியநல்லூர், ஆரியச்சக்கரவர்த்தி நல்லூர், ஆரிய கவுண்டனனூர், ஆரியக்கவுண்டன் வளவு முதலான பெயர்கள் பரந்த பிரதேசத்திற்குரிய இடப்பெயர்களாக உள்ளன. வரலாற்றுப் பழமைவாய்ந்த இவ்விடப்பெயர்கள் தற்காலத் தமிழகத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்களாகவும் இருந்துவருகின்றன. இப்பெயர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்ததன் காரணமாகத் தோன்றியவை எனக் கூறப்படுகின்றது. அதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் என்ற அதே பெயர் தென்தமிழகத்தில் ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பெயராக இருப்பது யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் ஆரியச்சக்கரவத்திகளின் ஆட்சியை நினைவுபடுத்த தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் (1913ஆம் ஆண்டு) "ஈழநாடும் தமிழ்ச் சங்கமும்" என்ற நூலில் அமரர் முத்துத்தம்பிப்பிள்ளைஅவர்கள்குணபூஸண சிங்கையாரியனின் அமைச்சன் ஒருவன் ஆற்றிய பணிகள் பற்றி விரிவாகக் கூறும் போது குணபூஸணசிங்கையாரியனின் பெயரில் ஆரியகுளமும், அவனது மனையும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். மேலும் அவர் இம் மன்னன் காலத்திலேயே 63 நாயன்மார்களுக்கு நாயன்மார்க்கட்டில் ஆலயம் அமைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார். அண்மையில் நாயன்மார்க்கட்டு ஆலயத்திருக்குளம் மீளுருவாக்கம் செய்யப்பட்டபோது ஒரு அரிய தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டு அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்திரபாலா தொல்லியல் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு காலத்தால் சற்றுப் பிற்பட்டதாக இருப்பினும் அக்கல்வெட்டில் இவ்வாலயத் திருக்குளத்தை அமைத்தவன் சிங்கையாரியன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

13ஆம் பக்கம் பார்க்க...

**பரமு புஷ்பரட்ணம்**



# பிராந்திய செய்திகள்



## TIN இலக்கம் தொடர்பில் புதிய தகவல்




வரி செலுத்தும் அடையாள இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கான இறுதி நாள் மேலும் தாமதமாகலாம் என உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வரி வலையமைப்பை விரிவுபடுத்தியதன் பின்னர் அறவிடப்படும் வரித் தொகையை குறைக்கும் வாய்ப்பு இருப்பதாக அதன் பிரதி ஆணையாளர் நாயகம் சமன் சாந்த தெரிவித்துள்ளார்.

## வரலாற்றில் கறுப்பு பக்கம் பெருந்தோட்ட மக்களின் அத்தியாயம் தான் - மனோ கணேசன்



இலங்கைக்கும், பிரித்தானியாவுக்கும் இடையிலான 75 வருட இராஜதந்திர உறவு தொடர்பில் இலங்கை வந்துள்ள பிரித்தானிய இளவரசி ஆனுக்கு, இலங்கை வாழ் மலையக தமிழர் மற்றும் குறிப்பாக பெருந்தோட்ட மக்கள் தொடர்பில் இருக்கின்ற, அவரது பிரித்தானிய முடியரசின் பாரிய கடப்பாட்டை நினைவுறுத்துகிறேன். இதை சொல்ல இதுதான் சிறந்த வேளை என்பதை தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் உணர்கிறேன் என தமுகூ தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் கூறியுள்ளார்.

தற்போது சென்னையில் அயலக தமிழர் மாநாட்டில் தமிழக அரசின் அழைப்பின் பேரில் கலந்துகொண்டுள்ள மனோ கணேசன் சென்னையிலிருந்து தனது அதிகாரபூர்வ டுவிட்டர் தள செய்தி மூலம் மேலும் கூறியுள்ளதாவது, இலங்கை, பிரித்தானியா வரலாற்றில் கறுப்பு பக்கம், பெருந்தோட்ட மக்களின் அத்தியாயம் தான். இலங்கையின் ஏனைய மக்களுடன் ஒப்பிடும்போது கல்வி, சுகாதாரம், காணியுரிமை, வீட்டுரிமை, தொழிலுரிமை ஆகியவற்றில் மிகவும் பின்தங்கிய தரவுகளை கொண்ட தமிழ் பெருந்தோட்ட வதிவாளர்களின், குறை வளர்ச்சி தொடர்பிலான பிரித்தானிய முடியரசின் வரலாற்று கடப்பாட்டை இளவரசி ஆன் ஏற்க வேண்டும்.

நலிவுற்ற பிரிவினரான நமது மக்கள் தொடர்பிலான குற்றச்சாட்டு பட்டியலை இளவரசி ஆன் மீது சுமத்த நான் விரும்பவில்லை. ஆனால் இந்த கறுப்பு பக்கம் தொடர்பான நினைவூட்டலை நான் எடுத்து கூற விரும்புகிறேன். இன்று இந்திய வம்சாவளி மலையக தமிழர் என்று இன ரீதியாக அழைக்கப்படும் இம்மக்கள், பிரித்தானிய முடியரசின் பிரதிநிதிகளான கிழக்கிந்திய கம்பனியால் 1823ம் ஆண்டு முதல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டவர்கள். இன்றும்கூட, எமது உழைக்கும் மக்கள் பெருந்தோட்ட முகாமை நிறுவனங்களுடன் பின்னி பிணைக்கப்பட்டுள்ளனர். பிரித்தானியாவின் வெள்ளை ராஜ்யம் போன பிறகு உள்நாட்டு பிறவுன் ராஜ்யம் பெருந்தோட்டங்களில் எமது மக்களை இன்று ஆள்கிறது. இதனால் இன்னமும் இந்நாட்டின் முழுமையான பிரஜைகளாக கருதப்படாமல், நமது மக்கள் வாழ்கிறார்கள். இந்தியாவின் பாண்டிச்சேரி மக்களுக்கு பிரான்சிய ஆட்சியாளர்கள் செய்துவிட்டு சென்ற ஏற்பாடுகளை ஒத்த ஏற்பாடுகளைக்கூட பிரித்தானியா எமது மக்களுக்கு செய்யவில்லை.

ஆகவே, கடந்த காலங்களில் இழந்துவிட்ட வளர்ச்சியை மீளப்பெறும், விசேட ஒதுக்கீட்டு செயற்திட்டத்தின் அடிப்படையில், இலங்கையின் மிகவும் பின்தங்கிய பிரிவினரான பெருந்தோட்டங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு உதவிட முன்வருமாறு பிரித்தானியாவை நான், இம்மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மிகப்பெரிய கட்சியின் தலைவர் என்ற முறையில் கோருகிறேன். இன்று உங்களுக்கு பிரித்தானிய தூதுவர் அன்ரூ பெட்றிக் நடத்துகின்ற வரவேற்பு நிகழ்வுக்கு எனக்கு அழைப்பு விடுத்துள்ளார். நான் நாட்டில் இல்லாத காரணத்தால் அதில் கலந்துகொள்ள இயலாமல் இருப்பது அவருக்கு அறிவித்துள்ளேன். எமது கோரிக்கைகள் தொடர்பில் இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதுவரிடம் உரையாடி உள்ளேன். தொடர்ந்தும் உரையாட உள்ளேன் என தெரிவித்தார்.

## அனைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவு – இராஜாங்க அமைச்சர் கீதா

ஜனாதிபதி ஊடக மையத்தில் (11) அன்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், நாட்டின் 120,000 பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவை வழங்குவது சவாலாக அமைந்திருந்தது. அந்த வகையில் தற்போது மாணவர் ஒருவருக்காக ஒதுக்கப்படும் தொகையை 60 ரூபாய் முதல் 100 ரூபாய் வரையில் அதிகரிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார் என்று இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையின் பெருமளவான மாணவர்கள் போசாக்கு குறைப்பாட்டிற்கு ஆளாகியுள்ள நிலையில் புரோட்டின் நிறைந்த போசாக்கான உணவை வழங்க திட்டமிடப்பட்டிருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். அதற்கமையவே நாட்டிலுள்ள அனைத்து பாலர் பாடசாலை மாணவர்களுக்கும் காலை உணவு வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் திட்டத்தை செயற்படுத்தவிருப்பதாகவும், தோட்ட பாடசாலைகள் தவிர்ந்த பாலர் பாடசாலைகளில் மட்டும் 120,000 மாணவர்கள் இருப்பதாகவும், தோட்ட பாலர் பாடசாலைகளிலிருக்கும் 35,000 மாணவர்களும் உள்ளடங்களாக 155,000 மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன்பெறுவர் என்றும் தெரிவித்தார். அதேபோல் கர்ப்பிணித் தாய்மாருக்கான போசாக்குப் பொதிகளை வழங்க எதிர்பார்த்திருப்பதாகவும், அதற்காக 220,214 கர்ப்பிணித் தாய்மாருக்கு 4,500 பெறுமதியான போசாக்கு பொதிகளை 10 மாதங்களுக்கு வழங்க எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் பாலர் பாடசாலை ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட விருப்பதாகவும் தெரிவித்தார். நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் பாலர் பருவகால மேம்பாடு தொடர்பிலான தேசிய செயலாளர் அலுவலகத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்கும் 18,333 பாலர் பாடசாலை ஆசிரியர்கள் உள்ளனர். அவர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும். பாலர் பாடசாலைகளை மேம்படுத்தும் நோக்கில் ஆசிரியர்களுக்கான கொடுப்பனவாக மாதாந்தம் 2500 ரூபாயினை வழங்கவும், அது போதுமான தொகை இல்லை என்பதால் அதனை மேலும் அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.



## நுண்நிதி கடன் பொறிகளில் இருந்து மக்கள் விடுவிக்கப்படவேண்டும் - சஜித் பிரேமதாச



கிராமிய வங்கியின் கருத்தாக்கமாக பங்களாதேஷில் உருவாக்கப்பட்ட நுண் கடன் வங்கிக் கட்டமைப்பானது பெண்களை மையமாகக் கொண்டு மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. ஜனசவிய வேலைத்திட்டத்திலும், முன்னாள் ஹம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த மித்ரரத்ன என்ற நபர் கிராமிய வங்கிகளைப் போன்று பெண்களை மையப்படுத்தி ஜனசக்தி வங்கிகளை மிகவும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினார்.

இது முழுக்க முழுக்க பெண்கள் தலைமையிலான குடும்ப அலகுகளைக் கொண்ட திட்டம் என்பதோடு, வறுமையை ஒழிப்பதே நோக்கமாக இருந்தாலும், பல்வேறு நபர்கள் அப்பாவி மக்களுக்குப் பணத்தைக் கொடுத்து விட்டு, மிகவும் நலிந்த பிரிவினரைக் குறிவைத்து அதை வியாபாரமாக உருவாக்கி தற்போது பெரும் கடன் பொறியை உருவாக்கியுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

சில வர்த்தகர்கள் இந்த எண்ணக்கருவை வணிகமாக மாற்றியுள்ளனர். கடன் கொடுத்து, அதிக வட்டி அறவிட்டு, கடனை செலுத்த முடியாமல் போகும் போது கடனை இன்னும் அதிக சுமையாக மாற்றி அறவிட்டு வருகின்றனர். சிறந்தொரு எண்ணக்கரு அழிந்து கொண்டிருக்கும் இவ்வேளையில், நல்லாட்சி ஆட்சிக்காலத்தில் மங்கள சமரவீர இது தொடர்பில் கவனத்தை செலுத்தி, குறிப்பிட்ட அளவு நுண் நிதிக் கடனில் இருந்து விடுபட, வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடுகளை மேற்கொண்டார் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இது தற்போது கடுமையான பிரச்சினையாக மாறியுள்ளது. இதற்கு, தனிச் சட்டங்களைக் கொண்டு வந்து, நுண் நிதி கடன் வழங்கும் நிறுவனங்களை தெளிவான ஒழுங்குமுறைக்குள் கொண்டு வர வேண்டும். இந்த பெறுமானம் மிக்க எண்ணக்கருவை அதிக இலாபமீட்டும் ஒன்றாக மாற்றுவதை தவிர்க்கவும். நுண் கடன்களில் சிக்கித்தவிக்கும் மக்களை அதிலிருந்து மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் (12) அன்று இடம்பெற்ற நுண் நிதி கடன் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

## மின்சார கட்டணத்தை குறைக்குமாறு வலியுறுத்தல்

எரிபொருள் மற்றும் மின்சார கட்டணத்தை குறைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய கூட்டுத் தாபனமும், மின்சார சபையும் தற்போது பெரும் இலாபம் ஈட்டி வருவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த காலத்தில் மின்சார சபை கணிசமான இலாபத்தை ஈட்டியுள்ளதாக பாட்டலி சம்பிக்க ரணவக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

## தொடர்கிறது டெங்கு ஒழிப்பு திட்டம்

டெங்கு நுளம்பு பரவும் வகையில் வளாகங்களை பராமரித்து வந்த 175க்கும் மேற்பட்ட நிறுவனங்களுக்கு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சந்தன கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த வாரத்தில் மட்டும் 6,500 வளாகங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



# சினி துளிகள்



## அந்த நேரத்துல Pressure இருந்துச்சி - சிவகார்த்திகேயன்

நடிகர் சிவகார்த்திகேயன், தமிழ் சினிமாவில் பிரபல நடிகர்களில் ஒருவராக வலம் வருகிறார். தற்போது இவர் நடிப்பில் உருவாகியுள்ள அயலான் திரைப்படம் பிரமாண்டமாக வெளியானது. இப்படத்திற்கு ரசிகர்களும் நல்ல விமர்சனமே கொடுத்து வருகின்றனர்.

சமீபத்தில் நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்ட நடிகர் சிவகார்த்திகேயன், வெற்றிமாறன் பற்றி பேசியுள்ளார். அதில் அவர், "வெற்றி மாறனின் பொல்லாதவன் படத்தில் நடிக்க விரும்புகிறேன். எனக்கு அந்த படம் ரொம்ப ரொம்ப பிடிக்கும்".

"பொல்லாதவன் படம் ஒரு ப்ராப்பர் கமெர்ஷியல் படம். அவருடைய படங்கள் எல்லாம் கமெர்ஷியல்லி வெற்றியடைந்த படங்கள்தான். முதல் படத்தை pressure ல தான் வெற்றிமாறன் அப்படி எடுத்தார். இப்போது கேட்டால் அப்படி பண்ணமாட்டார். பொல்லாதவன் படம் கமெர்ஷியலி சூப்பர் படம்" என்று சிவகார்த்திகேயன் கூறியுள்ளார்.



## பிரபாஸ், கமல் நடித்த கல்கி 2898 AD பட ரிலீஸ் திகதி அறிவிப்பு

நடிகர் பிரபாஸ் நடிப்பில் கடைசியாக வெளிவந்த சலார் படம் தெலுங்கு, ஹிந்தியில் நல்ல வசூல் ஈட்டினாலும், தமிழில் படுதோல்வி அடைந்தது. கேஜிஎப் படம் போலவே இருக்கிறது என பலரும் விமர்சித்தனர்.

அடுத்து ரசிகர்களின் பார்வை பிரபாஸ் நடித்து வரும் கல்கி 2898 AD படத்தின் மீது திரும்பி இருக்கிறது. அந்த படத்தில் கமல் வில்லனாக நடித்து இருக்கிறார் என்பதால் தமிழிலும் அதிகம் எதிர்பார்ப்பு இருக்கிறது.

அமிதாப் பச்சன், தீபிகா படுகோன், திஷா பாட்னி என பல பொலிவூட் நட்சத்திரங்களும் இந்த படத்தில் நடித்து இருக்கின்றனர்.

கல்கி2098ADபடம்வரும்மே9ம்திகதிரிலீஸ்ஆகும்என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. கோடை விடுமுறையை குறிவைத்து படக்குழு இதை அறிவித்து இருக்கிறது.





## நெகிழ வைக்கும் பாலாவின் செயல்

விஜய் டிவியில் ஒளிபரப்பான கலக்கபோவது யாரு என்ற நிகழ்ச்சி மூலம் மக்கள் மத்தியில் பிரபலமானவர் தான் பாலா. திரைப்படங்கள் வெற்றி விழா மற்றும் இசை வெளியீட்டு விழா போன்ற நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கும் பாலா, தற்போது சில படங்களில் நடித்து வருகிறார். பாலா சின்னத்திரை, வெள்ளித்திரை என இரண்டிலும் பிஸியாக இருந்தாலும் ஒரு பக்கம் மக்களுக்கு பொது சேவையையும் செய்து வருகிறார். சமீபத்தில் மிச்சாங் புயலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பல உதவிகளை செய்து இருந்தார்.

இந்நிலையில் தற்போது பாலா, மருத்துவ சேவைக்காக இலவச ஆட்டோவை வழங்கி இருக்கிறார். இதை பற்றி பேசிய பாலா, "மருத்துவத்திற்கு செல்பவர்கள் பேருந்திற்காக காத்திருந்து செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது. அவசர காலகட்டத்தில் ஆட்டோவில் கூட செல்ல முடியவில்லை". "இதனால் தான் கர்ப்பிணி பெண்கள், முதியோர்கள் மற்றும் மாற்று திறனாளிகளுக்காக இலவச ஆட்டோ சேவையை தொடங்குகிறோம். ஆட்டோ ஓட்டுநர் மற்றும் பெட்ரோல் செலவை நானே ஏற்றுக்கொள்கிறேன்" என்று பாலா கூறியுள்ளார்.

## ஹீரோயினாகும் மாயா

பிக் பொஸ் நிகழ்ச்சி பலருக்கும் அடையாளத்தை தேடி கொடுக்கும். சிலர் அடையாளத்துடனே இந்த நிகழ்ச்சியில் போட்டியாளராக பங்கேற்பார்கள். அப்படி பிக் பொஸ் நிகழ்ச்சிக்கு முன்பே ரசிகர்கள் மத்தியில் அடையாளத்தை பெற்றவர் மாயா. விக்ரம், லியோ போன்ற சில திரைப்படங்களில் இவர் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிக் பொஸ் நிகழ்ச்சியின் ஆரம்பத்தில் நல்ல வரவேற்பை பெற்ற மாயா அதன்பின் மோசமான வரவேற்பை ரசிகர்கள் மத்தியில் இருந்து பெற துவங்கிவிட்டார். ஆனாலும் கூட தற்போது பிக் பொஸ் 7 நிகழ்ச்சியின் டொப் 5ல் இடம்பிடித்துள்ளார்.

இந்நிலையில், பிக் பொஸ் நிகழ்ச்சிக்கு பின் மாயா ஹீரோயின் ஆகப்போகிறார் என தகவல் வெளியாகியுள்ளது.

மாவீரன், வெந்து தணிந்தது காடு, ஜவான் ஆகிய படங்களில் ஆக்ஷன் ஒளிப்பதிவாளராக பணிபுரிந்த Yannick Ben என்பவரின் இயக்கத்தில் புதிய படம் ஒன்று உருவாகவுள்ளதாம். இப்படத்தில் மாயா ஹீரோயினாக அறிமுகமாக போகிறார் என லேட்டஸ்ட் தகவல் வெளியாகியுள்ளது.





# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

31

சிறிலங்கா தனது இராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கும்போது, மறுதரப்பான விடுதலைப் புலிகள் அமைதியாக இருந்துவிட்டால், அது அவர்களுக்கு பெரும் ஆபத்தாக முடிந்துவிடும். சிறிலங்கா போர் ஒன்றைத் தொடுக்கும் போது அதனை எதிர்கொள்ள முடியாத ஒரு நிலையை விடுதலைப் புலிகளுக்கு ஏற்படுத்திவிடும்.

இதனால்தான் 'சமாதானத்துக்கான சரியான வழி, எப்போதும் போருக்கு தயாராக இருப்பதுதான்" என்று அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் வோசிங்டன் தெரிவித்தாரோ..? எனவே, சிறிலங்கா பலத்தை பெருக்கிக்கொண்டிருக்கும் போது விடுதலைப் புலிகள் மௌனமாக இருந்துவிட முடியாது.

அவர்களும் தமது படை வலுவை கட்டியெழுப்ப வேண்டியது சமாதான காலத்திலும் அவசியமாகியிருந்தது. இந்த நிலையில்தான், தலைவர் அவர்களால் பால்ராஜ் தலைநகர் திருமலைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றார். 2004ம் ஆண்டின் ஆரம்பத்தில் திருகோணமலையில் தளபதி பிரிகேடியர் பால்ராஜ் கால் பதிக்கின்றார். வாகரையில் புதிய பயிற்சித் தளங்களை அவர் நிறுவுகின்றார். போராளிகளுக்குச் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. கிழக்குக்கு தேவையான ஆயுத தளபாடங்களை தரை வழியாகக்கொண்டு சென்று சேர்ப்பதைவிட கடல் வழியாக இறக்குவதே சுலபமாக இருந்தது.

எனவே, அந்த மாவட்டத்திற்கு தேவையான ஆயுதங்கள் கடல் வழியாக இறக்கப்படுகின்றன. பெருமளவு மோட்டார்கள் இறக்கப்பட்டு, அதனை இலக்குகளை நோக்கி வீசுவதற்கான பயிற்சிகள் போராளிகளுக்கு வழங்கப்படுகின்றது. புதிய குறிசூட்டு அணியினர் (சினைப்பர்) உருவாக்கப்படுகின்றார்கள். குறிப்பிட்டு கூறுவதானால் பால்ராஜ் அவர்களின் வருகைக்கு பின்னர் விடுதலைப் புலிகள் படையணிகள் அங்கு பலம் பெறத் தொடங்கியிருந்தன.

இதேவேளை, சமாதான காலமான இக்காலத்தில் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் கிழக்கு மாகாணத்தை பார்வையிட சிறிலங்காப் படையின் உலங்கு வானூர்தியில் திருகோணமலை சேனையூரில் வந்து இறங்குகிறார். அவர் சம்பூர் தொடக்கம் வாகரை வரை சென்று பார்வையிட்டு பொறுப்பாளர், தளபதிகள் ஆகியோரைச் சந்தித்து மக்களுடன் கலந்துரையாடுகின்றார்.

இதேநேரம், சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் போராளிகள் கடல் வழியான பயணங்களை கிழக்கிற்கு மேற்கொண்டனர். இதற்கிடையே, தமிழீழ விடுதலைப் புலிகள் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அவர்களும் வன்னியில் இருந்து காடு மற்றும் கடல் வழிகளூடாக இரகசிய பயணம் ஒன்றை திருமலைக்கு மேற்கொண்டார்.

அங்கு தளபதி சொர்ணம் அவர்களுடன் இணைந்து அங்குள்ள கள நிலைமைகளை ஆராய்கின்றார். அத்துடன், அங்குள்ள மக்களை சந்தித்து கலந்துரையாடிவிட்டு வன்னி திரும்புகின்றார். அன்று இது ஒரு இரகசியப் பயணமாகவே அமைந்திருந்தது.

இதன்பின்னர், விடுதலைப் புலிகளின் ஒரு நீண்டகால திட்டமிடலின் அடிப்படையில் வெருகல் பிரதேசத்தில் கல்லடி எனும் கிராமத்தில் வானொலி ஒலிபரப்பு சேவை என்ற பெயரில் தொலைத்தொடர்பு வான்படை, கடல்வழி அவதானிப்பு கருவிகளை இணைப்பதற்காக இரண்டு கோபுரங்கள் (ரவர்கள்) அமைக்கப்படுகின்றன. கடற்கரையை அண்மித்ததாக மலையில் 120 அடி உயரம், 200 அடி உயரம் உடையதுமான இரண்டு கோபுரங்கள் அமைக்கும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

இதனை அறிந்த சிறிலங்கா படை புலனாய்வாளர்கள், இதுகுறித்து ஆராய்கிறார்கள். பின்பு சிறிலங்கா வானொலி ஒன்றில் இது செய்தியாக வெளியிடப்படுகின்றது. திருமலையில் விடுதலைப் புலிகளின் விமானத் தளம் அமைப்பதற்கான கண்காணிப்புக் கோபுரம் வெருகல் பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது என்ற செய்தி அங்கு பரபரப்பினை ஏற்படுத்துகின்றது. இந்தக் கோபுரம், அருகில் உள்ள சிங்கள கிராமங்களுக்கும் தெரிவதால் அங்குள்ள சிங்கள மக்களும் ஊர்காவல் படையினரின் மனதிலும் சிறு அச்சம் ஏற்படுகின்றது. இவ்வாறு இருக்கையில் 2004ம் ஆண்டு நடுப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒரு தொகுதி ஆயுத தளபாடங்கள் கடல்வழியாக வந்து இறக்கப்படுகின்றன.

கடற்புலிகளால் ஆயுதங்கள் பாதுகாப்பாக இறக்கப்பட்டு மட்டக்களப்பு மாவட்ட தளபதி பானுவிடம் ஒப்படைக்கப்படுகின்றன. வன்னியில் இருந்த ஆயுத பயிற்சி ஆசிரியர்கள், நிர்வாக திறன்மிக்க போராளிகள், தாக்குதல் வியூகங்களை வகுக்கும் தளபதிகள், இரகசியமாக திருகோணமலை மாவட்டத்திற்கு, மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டு பயிற்சி வகுப்புகள் நிர்வாகம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். அங்குள்ள போராளிகளுக்கு கற்பிக்கின்றார்கள். மரபுவழி படையணிகள் கட்டி வளர்க்கப்படுகின்றன. குறிப்பாக ஜெயந்தன் படையணி, அன்பரசி படையணி, மோட்டார் படையணி என்பன சிறப்புற கட்டியமைக்கப்படுகின்றன.



இவற்றுக்குமத்தியில் சிறிலங்காப் படையினர் கட்டுப்பாட்டு பகுதியில் இருந்துகொண்டு செயற்படும் துரோகிகள் களையப்படவேண்டிய அவசியம் எழுகின்றது. விடுதலைக்கு ஆதரவாகச் செயற்படுகின்றவர்களை படைப் புலனாய்வாளர்களும், துரோகிகளும் படுகொலை செய்துகொண்டிருந்தமையால் இதனைத் தடுத்து நிறுத்த அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒரு இறுக்கமான நிலை ஏற்படுகின்றது. இதனால், இதற்கான விசேட அணியொன்று "பிஸ்ரல் குறுப்" என்ற பெயரில் இரகசியமாக உருவாக்கப்படுகின்றது. தமிழீழ விடுதலைக்காக துரோகத் தனங்களில் ஈடுபட்ட துரோகிகள், படைப் புலனாய்வாளர்கள் இக்குழுவினரின் இலக்கிற்குள் அகப்பட்டுக்கொள்கின்றார்கள்.

இரு பகுதிக்கும் இடையே ஒரு மறைமுக மோதலாக இது இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில்தான், 2004ம் ஆண்டு 12ம் மாதம் 26ம் நாள் சுனாமி தமிழீழ கரையெங்கும் தாக்குகின்றது. திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியான சம்பூர் தொடக்கம் வாகரை மாங்கேணி கடற்கரை வரை தாக்கிய சுனாமியால் ஆயிரக் கணக்கான மக்கள் காவுகொள்ளப் படுகின்றார்கள். மக்களின் உடமைகள் அழிக்கப்படுகின்றன. இதன்போதும் வாகரையில் விடுதலைப்புலிகளின் சில தளங்கள் பாதிப்படைகின்றன. குறிப்பாக அங்கு இருந்த மோட்டார் தளங்களில் கடல் தாக்கம் ஏற்படுகின்றது. இந்தச் சுனாமிப் பாதிப்பிற்குள் தளபதி பால்ராஜ் அவர்களும் உள்ளாகின்றார்.

இதனைத் தொடர்ந்து திருமலையில் மக்களை மீள்கட்டுமானம் செய்யும் பணிகளில் விடுதலைப் புலிகளின் நிர்வாக அலகுகள் செயற்படுகின்றன. கொல்லப்பட்ட மக்களின் உடலங்களை எடுத்து அடக்கம் செய்யும் பணியும், மக்களுக்கான இருப்பிட வசதிகள், உணவு வசதிகள் என்பனவற்றை ஏற்படுத்திக்கொள்ளும் பணிகளில் ஈடுபடுகின்றார்கள். இதேவேளை, இந்தச் சுனாமியினால் படையினரின் வளங்களும் பாதிக்கப்பட்டு அவர்களின் போர் முன்னெடுப்புக்கள் தாமதமடைகின்றன. போர் ஒன்றை சிறிலங்கா இராணுவம் உடனடியாக ஆரம்பிக்க முடியாத நிலையை இந்த சுனாமி ஏற்படுத்தியது.

இயற்கையின் பேரனர்த்தத்தில் (சுனாமி) இருந்து மக்களை மீள் கட்டமைக்கும் செயற்பாடுகள் விடுதலைப் புலிகளால், கிழக்கிலும், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் பகுதிகளிலும் சிறப்புற மேற்கொள்ளப்படுகின்றன.

இதற்கான நிர்வாக அலகுகள் திறம்படச் செயற்படுகின்றன. விடுதலைப் புலிகளின் அனைத்துக் கட்டமைப்புக்களும் மக்கள் மீள்கட்டுமானப் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றன. உலக நாடுகளிடமும், புலம்பெயர்ந்த மக்களிடம் இருந்து கிடைத்த உதவிகளை பெற்று மக்களுக்கு சென்றடைய விடுதலைப் புலிகள் நிர்வாகங்களை உருவாக்குகின்றார்கள்.

இதேவேளை, சமாதான செயலகத்தால் சுனாமி மீள்கட்டுமான செயற்குழு உருவாக்கப்படுகின்றது. இதனூடாக உலக நாடுகளிடம் இருந்து கிடைக்கும் பொருட்கள் மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. இந்த சுனாமியினால் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி மக்களுக்குத் தேவையான பொருட்கள் வன்னிக்கு எடுத்துவரப்பட்ட அதேவேளை, விடுதலைப் புலிகளுக்குத் தேவையான பொருட்களும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

குறிப்பாக பெறுமதிமிக்க இலத்திரனியல் பொருட்கள், தொலைத்தொடர்பு பொருட்கள் ஏன் விமான உதிரிப் பாகங்கள் கூட கொள்வனவு செய்து இறக்கும்போது பிடிபட்டிருந்த செய்தியும் அன்று நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

**தொடரும்...**

# பால் மா உற்பத்தியும் மனித நுகர்வும்

கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிக முக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையை பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவ ரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக 'இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்' என்ற இத்தொடர் அமைகிறது.

இலங்கை மக்களில் பெரும்பாலான வர்களின் காலைத் தேநீரில் பால் சேர்க்கப்படுகிறது. எனினும் அதிகளவில் பொதி செய்யப்பட்ட பால் மா வடிவிலேயே சேர்க்கப்படுகிறது. திரவப் பால் வடிவில் அது சேர்க்கப்படுவது மிக மிகக் குறைவு. அதற்கு பல காரணங்கள் உள்ளன. இலங்கையில் நுகரப்படும் பால் மா நியூசிலாந்து, அவுஸ்ரேலியா, டென்மார்க் போன்ற நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டே உள்ளூர் சந்தைக்கு விநியோகிக்கப்படுகிறது. பால் மா இறக்குமதிக்கே பல பில்லியன் டொலரை வெளிநாடுகளுக்கு வழங்க வேண்டியிருக்கிறது. இது நாட்டின் அந்நிய செலாவணிக் கையிருப்பில் கணிசமான பாதிப்பை ஏற்படுத்துகிறது. Highland, பெலவத்தை போன்ற உள்ளூர் பால் மா நிறுவனங்கள் தமது உற்பத்திகளை உள்ளூர் சந்தைக்கு விநியோகிக்கின்றபோதும் அவை நியூசிலாந்தின் fonterra போன்ற நிறுவனங்களின் பால் மா உற்பத்திகளை விட மிக மிக குறைவே. மக்களும் உள்ளூர் உற்பத்திகளை விட வெளிநாட்டு இறக்குமதிக்கே அதிக விருப்பத்தைக் காட்டுகின்றனர். சுதேசிய உணர்வுள்ள சில படித்த சிங்கள மக்கள் மாத்திரமே இலங்கையின் உள்ளூர் பால் மாவை அதிகமாக வாங்குவதைக் காண முடிகிறது. உள்ளூர் பால் மா வகைகள் உள்ளூரின் சகல இடங்களிலும் கிடைப்பது குறைவு என்பதோடு வெளிநாட்டுப் பால் மா வகைகள் கிராமத்தின் பட்டி தொட்டி எங்கும் கிடைப்பது கிராம மக்களையும் அவற்றை நோக்கி நகர்த்துகிறது.

சில வருடங்களாக அரச அனுசரணையுடன் கால்நடை வைத்திய அலுவலகங்களின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு திரவப் பால் நுகர்வு தொடர்பாக விழிப்பணர்வுக் கருத்தரங்குகளை நடத்தி வருகிறோம். இதன் போது மாணவர்களுக்குத் திரவப் பாலையும் வழங்குவோம். கறவை மாடுகள் வைத்திருக்கும் பண்ணையாளர்களின் பிள்ளைகள் கூட திரவப் பாலை விட பால் பவுடரை விரும்புவதை இதன்போது அவதானிக்க முடிந்தது. அதாவது, பாலைக் கறந்து பால் கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு கொடுத்துவிட்டு, பால் மாவை கடைகளில் விலை கொடுத்து வாங்குவதை விரும்புகின்றனர். பசுப்பாலின் சுவை குறைவாகவும் ஒருவித மணம் வீசுவதாகவும் சளி பிடிப்பதாகவும் காரணங்கள் சொல்கிறார்கள். பல இடங்களில், பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பால் வழங்குவதை நிறுத்திவிட்டு, பால் மா ஊட்டுவதையும் அவதானிக்க முடிகிறது. இந்தக் கட்டுரை, பிணக் கூராய்வு (post mortem) செய்வது போல இந்த விடயங்களை ஆராயப் போகிறது.

விலங்குகளின் பாலை கறந்து அருந்திய மனிதன், மித மிஞ்சிய பாலைச் சேமிக்க வேண்டிய தேவை ஏற்பட, அதற்கென பல வழிமுறைகளைக் கையாளத் தொடங்கினான். அதில் ஒரு முறைதான் பாலின் தண்ணீரை அகற்றி அதனை மாவாகச் சேமித்தலாகும் (பாலில் 87% வரை தண்ணீர்தான் உள்ளது என்பதுடன் பாலிலுள்ள தண்ணீர் பல நுண்ணங்கிகள் வளரக் கூடிய ஊடகமாக உள்ளது). ஆசியா, மத்திய கிழக்குப் பகுதிகளில் சூரிய ஒளியில் நீரை ஆவியாக்கி, பாலை சில காலம் பழுதடையாமல் சேமித்தமைக்கான வரலாற்றுக் குறிப்புகள் கிடைத்திருக்கின்றன.

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தான் நவீன பால் மாவின் தொடக்கம் ஆரம்பமாகியது. 1802 ஆம் ஆண்டளவில் பிரான்ஸ் நாட்டின் Francois Appert என்பவர், தகரத்தில் அடைத்து பாலைச் சேமித்திருக்கிறார். 1864 இல் Gail borden என்பவர் செறிவூட்டிய (condensed milk) பாலை உற்பத்தி செய்திருக்கிறார். இவ்வாறான நடவடிக்கைகள், நவீன பால் சேமிப்பு மற்றும் பால் பவுடர் உற்பத்திக்கு வழிகோலின. 19ஆம் நூற்றாண்டின் கடைசியில் சூடான இடத்தினூடு பாலைச் செலுத்தி பாலின் நீர்த்தன்மையை இழக்கச் செய்யும் யுக்தி பயன்படுத்தப்பட்டது. அதன்பின், பல நவீனத் தொழில் நுட்ப மாற்றங்கள் நிகழ்ந்து இன்றைய நவீன Spray drying முறை உருவாகியது எனலாம்.

2 ஆம் உலகப்போர் காலத்தில் பால் மாவின் தேவை கணிசமாக உணரப்பட்டது. யுத்த முனைக்கு திரவப் பாலை கொண்டு செல்வதை விட பால் மாவாக கொண்டு செல்வது இலகுவாக இருந்தது என்பதுடன் நீண்ட நாட்களுக்கும் அதனை கெடாமல் பாதுகாக்கவும் முடிந்தது. உலகப்போரின் பின், குழந்தைகளின் மாற்று உணவாக பால் பயன்படத் தொடங்கியது. பல நாடுகளில் குழந்தைகளுக்கான பால் உணவுகள் தயாரிக்கப்பட்டன. மித மிஞ்சியவை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதியும் செய்யப்பட்டன.

இலங்கையும், முற்று முழுதாகவே உள்ளூரில் உற்பத்தியாகும் திரவப் பாலை நுகரும் நாடாகவே இருந்தது. (நாட்டின் மொத்தக் குடித்தொகையில் மிக குறைவானவரே பாலை அருந்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது). ஆரம்பத்தில், வெளிநாடுகளின் பல்தேசிய நிறுவனங்கள் இலங்கைக்கு இலவசமாக பால்மாவை வழங்கின. குறிப்பாக குழந்தைப் பால் மா. இதற்காக கடுமையான பணச் செலவுடன் விளம்பரங்கள் செய்து மக்களிடம் பால் மா உற்பத்திகளைக் கொண்டு சேர்த்தனர். இதன் காரணமாக மக்கள் திரவப் பால் நுகர்வைக் கைவிட்டு பால் மா நுகர்வுக்கு அடிமையாகினர். பாலை அருந்தாத மக்களும் பால் நுகர்வுக்கு மாறினர். இலங்கையின் பாற்பண்ணைத் துறையும் வெளிநாடுகளில் தங்கியிருக்கும் வகையாக மாறியது. மக்களின் தேவைக்கு உள்ளூர் உற்பத்தி போதியதாக இருக்கவில்லை. இன்றும் அந்த நிலை தொடர்கிறது.

இந்தியாவுக்கும் இதேபோன்று பல்தேசிய நிறுவனங்கள் இலவசமாக பால் மாவை வழங்கிய போதும் அதை நேரடியாக மக்களுக்கு இலவசமாக வழங்காமல் தமது பால் கட்டமைப்பு வலையமைப்பின் ஊடாக திரவப்படுத்தியே வழங்கினர் (இதனை வர்கீஸ் குரியன் அவர்களின் I too had a dream சுயசரிதையின் ஊடாக அறிந்து கொண்டேன்). இது அவர்களின் இன்றைய தன்னிறைவுக்கு வழிகோலியது.

### பால் மாவை உற்பத்தி செய்தல்

நாம் தினமும் நுகரும் பால் மா, பல மாற்றங்களுக்கு உட்பட்டே எம்மிடம் வந்து சேர்கிறது. திரவ நிலைப் பாலில்



உள்ள நீர்த்தன்மை பல செயற்பாடுகளினூ டாக நீக்கப்பட்டு பால் மா உருவாகிறது. பண்ணைகளில் கறக்கப்படும் பால், சேகரிப்பாளர்களால் சேகரிக்கப்பட்டு பால் மா உற்பத்தித் தொழிற்சாலைக்கு கொண்டு வரப்படுகின்றது. அங்கு பாலிலுள்ள வெளித் தூசு - துணிக்கைகள் அகற்றப்பட்டு, நுண்ணங்கிகள் - அவற்றின் நொதியங்கள் அகற்றப்பட்டு (Heat treatment) அடுத்தகட்டச் செயற்பாட்டுக்கு தயாராகிறது.

இதன்பின், பாலின் நீர்த்தன்மையை நீக்கும் செயற்பாடுகள் ஆரம்பமாகின்றன. வெப்பம் மிகுந்த வெற்றிடத்தினூடாகச் செலுத்தப்படும் பாலிலுள்ள நீரின் பெரும் பகுதி ஆவியாக்கப்படுகிறது. சில இடங்களில் மென் சவ்வூடான பிரசாரண முறையில் நீர் பிரித்தெடுக்கப்படுகிறது. இவ்வாறு நீர் குறைந்து செறிவாக்கப்பட்ட பால் அதிக அழுத்தம் மிக்க கலன்களினூடாக செலுத்தப்பட்டு சிறு சிறு துணிக்கைகளாக உடைக்கப்படுகிறது. பின்னர், அதி வெப்பமான பகுதிகளின் ஊடாக விரைவாக செலுத்தப்பட்டு, நீர்த் தன்மையை மேலும் இழக்கின்றது. இந்த முறையை spray drying என்பார்கள். இது பால் மா உற்பத்தியில் பரவலாக பயன்படுத்தப்படும் தொழில்நுட்பமாகும். தற்காலத்தில் spray drying தொழில்நுட்பத்திலும் பல மேம்பட்ட முறைகள் உள்ளன.

உலர்ந்த பால் துணிக்கைகள் குளிர்விக்கப்பட்டு பால் மாவாக பிரித்தெடுக்கப்படுகின்றன. தேவை களுக்கு ஏற்ப துணிக்கைகளில் சேர்வைகள் சேர்க்கப்பட்டு பொதியிடப் படுகின்றன. சிலவகை பால் மாக்கள் சுவையூட்டப்படுகின்றன் ஊட்டச் சத்துக்கள் சேர்க்கப்படுகின்றன. (உதாரணம் : குழந்தைகளின் பால்மா). இப்படியாக தயாரிக்கப்படும் பால் மா களஞ்சியப்படுத்தப்பட்டு தரப் பரிசோதனைகள் பலவற்றுக்கு உட்பட்டு சந்தைக்கும் விடப்படுகிறது. இலங்கையின் பால் மா சந்தையில், அதிகளவில் வெளிநாட்டு பால் மா வகைகளே செல்வாக்குச் செலுத்துகின்றன. அண்மைக்காலத்தில் இறக்குமதிக்குரிய பணக்கையிருப்பு இல்லாத காரணத்தால் கணிசமான அளவு உள்ளூர் பால் மா வகைகளும் சந்தைக்குள் வரத் தொடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### சர்வதேச பால் மா வர்த்தகம்

இன்றைய திகதியில் சர்வதேச பால் மா ஏற்றுமதி வர்த்தகத்தில் ஐக்கிய அமெரிக்கா, நியூசிலாந்து, ஜேர்மனி, அவுஸ்ரேலியா, பிரான்ஸ், நெதர்லாந்து போன்ற நாடுகளும் பால் மா இறக்குமதியில் சீனா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மெக்சிகோ போன்ற நாடுகளும் உள்ளன. இலங்கையும் கணிசமான அளவு பால் மாவை இறக்குமதி செய்கிறது. இலங்கைக்கு நியூசிலாந்தின் Fonterra நிறுவனம் தான் அதிகளவு பாலை இறக்குமதி செய்கிறது.

பால் மாவில், முழு ஆடைப் பால்மா (Full cream milk powder), ஆடை நீக்கிய பால் மா (Non fat milk/skimmed milk powder), குழந்தைகள் பால்மா (infant milk), புரதப் பால் மா (whey protein milk powder) என பல வகை உண்டு.

### Fontera பால் கூட்டுறவு பல் தேசிய நிறுவனம்

நியூசிலாந்து பாற் பண்ணையாளர்களால் நிர்வகிக்கப்படும் பல்தேசிய பால் கூட்டுறவு அமைப்பு இலங்கையின் பால்மா தேவையின் பெரும் பகுதியை நிறைவு செய்கிறது. உலக பால் வியாபாரத்தில் 30% இதன் வசமே உள்ளது. உலகின் 6 வது பால் உற்பத்தி நிறுவனமான இது தென்னரைக் கோளத்திலுள்ள மிகப்பெரிய பால் உற்பத்தி நிறுவனமாகும். பலதரப்பட்ட பால் பவுடர் வகைகள், ஏனைய பால் சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்து சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும் இந்த நிறுவனம் வருடாந்தம் 22 பில்லியன் நியூசிலாந்து டொலரை வருமானமாகப் பெறுகிறது. இலங்கையின் அங்கர், நத்தி என்பன Fonterra நிறுவனத்தின் பால் மா உற்பத்திகளே.

### பால்மா தொடர்பான சர்ச்சைகள்

1.குழந்தைகளுக்கு வழங்கும் பால் உணவுகள் (infant formula) தொடர்பான சர்ச்சைகள் : குழந்தை உணவில் பால் மா முக்கியமான உள்ளீடு. அடிக்கடி நிகழும் உள்ளீடுகளின் தரம் தொடர்பான சர்ச்சைகள் மக்களை அச்சுறுத்துகின்றன. சீனாவில் இடம்பெற்ற மெலமைன் எனும் புரதம் போன்ற பதார்த்தத்தை குழந்தைப் பால் உணவில் சேர்த்ததன் காரணமாக சில பச்சிளம் குழந்தைகள் இறந்தன. இதன்பின் உலகளாவிய ரீதியில் குழந்தை உணவுகளை நுகர்வது குறைந்தது. இன்றை வரைக்கும் சீனாவில் உள்ளூர் பால் மா சேர்ந்த குழந்தை உணவுகளை அவர்கள் புறக்கணிக்கின்றனர். சீனாவில், சீன பால் மாவில் செய்யப்பட்ட குழந்தை உணவுகளை விட நியூசிலாந்து போன்ற நாடுகளில் இருந்து வரும் குழந்தைப் பால் உணவுகளுக்கு நல்ல கிராக்கி உண்டு. பால் மாவின் சர்வதேசக் கேள்வி முறையில் நியூசிலாந்தின் பால் மாவினை அதிக விலைக்கு வாங்குகின்றனர். இதனால் சீனாவுக்கான ஏற்றுமதி அதிகரித்து இலங்கை போன்ற நாடுகளின் இறக்குமதியின் செலவு அதிகரிக்கிறது.

மேலும், குழந்தை உணவுகளை தயாரிக்கும் நிறுவனங்கள் செய்யும் விளம்பரங்கள், உலக சுகாதார நிறுவனத்தால் (WHO) பரிந்துரைக்கப்பட்ட குழந்தைகளுக்கான தாய்ப்பால் ஊட்டலை குறைப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது.

13ஆம் பக்கம் பார்க்க...

சிவபாத சுந்தரலிங்கம்

06ஆம் பக்கத் தொடர்ச்சி...

தமிழ் மக்கள் பேரவை இந்த அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டது. துரதிஷ்டவசமாக அங்கு பொது அமைப்புகளின் ஐக்கிய முன்னணி உருவாக்கப்படவில்லை. சில தனி நபர்களே கட்சி சாராதவர்களாக அங்கம் வகித்தனர். இவர்களுக்கு அப்பால் அரசியல் கட்சிகளே ஐக்கிய முன்னணியாக இயங்கின. உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் வந்ததும் அரசியல் கட்சிகளுக்கிடையே முரண்பாடுகள் ஏற்பட்டன. தமிழ் மக்கள் பேரவை சிதைவடைந்தது. இதைச் சிதைத்ததில் விக்கினேஸ்வரன், கஜேந்திரகுமார், சுரேஸ் பிரேமச்சந்திரன், சித்தார்த்தன் ஆகிய நால்வருக்கும் பங்குண்டு. சிதைப்பின் அளவில் மட்டும் பங்குகள் வேறுபடலாம். தேசிய அரசியல் இயக்கத்திற்கு அரசியல் கட்சிகள் தலைமை தாங்கக் கூடாது. கட்சி அரசியலினாலும் தேர்தல் அரசியலினாலும் ஏற்படும் முரண்பாடுகள் அந்த இயக்கத்தை பலவீனப்படுத்தும். மேற்கூறியதுபோல தமிழ் மக்கள் பேரவைக்கு அதுவே நடந்தது. இந்தத் தேசிய அரசியல் இயக்கம் தெளிவான அரசியல் இலக்கு, வலுவான அடிப்படைக் கொள்கைகள், நீண்டகால குறுகியகால வேலைத்திட்டங்கள், வலுவான அமைப்புப் பொறிமுறை, வினைத்திறன் மிக்க வலுவான செயற்பாட்டாளர்கள், அர்ப்பணமும் தியாகமும் மிக்க தலைமை என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மூன்றாவது தமிழ் மக்கள் ஒரு சிறிய தேசிய இனம். அது தனது அக ஆற்றலை மட்டும் வைத்துக்கொண்டு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாது. புற ஆற்றலையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை அடிப்படை சக்திகளாக இருப்பவர்கள் தாயக மக்களும் அதன் நீட்சியாகவுள்ள புலம்பெயர் மக்களுமாவர். சேமிப்புச் சக்திகளாக இருப்பவர்கள் மலையகத் தமிழ் மக்கள், தமிழக தமிழ் மக்கள் உட்பட உலகெங்கும் வாழும் தமிழக வம்சாவழித் தமிழர்களாவர். நட்புச் சக்திகளாக இருப்பவர்கள் தமிழக முற்போக்கு ஜனநாயக சக்திகள் உட்பட உலகெங்கும் வாழும் முற்போக்கு ஜனநாயக சக்திகளாவர்.

இந்த அடிப்படைச் சக்திகளையும், சேமிப்புச் சக்திகளையும், நட்புச் சக்திகளையும் ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தின் கீழ் அணிதிரட்ட வேண்டும். இதற்கு நிலம் - புலம் - தமிழகம் இடையே ஒருங்கிணைந்த வேலைத்திட்டம் அவசியமாகும். உலகத் தமிழர்களை இணைப்பதற்கு உலகத் தமிழ்த் தேசியவாதம் ஒன்றைக் கட்டியெழுப்பலாமா? என்பது பற்றியும் யோசிக்கவேண்டும். இதன்மூலம் ஈழத் தமிழர்களின் விவகாரத்தை உலகத் தமிழர்களின் பொது விவகாரமாக மாற்ற வேண்டும். உலக முற்போக்கு ஜனநாயக சக்திகளின் ஆதரவு தமிழ் மக்களுக்கு சார்பாக சர்வதேச அரசியலைத் திருப்புவதற்கு மிகவும் அவசியமாகும். இதற்கு தமிழ் அரசியல் ஜனநாயக விழுமியங்களை அதிகளவில் உள்வாங்கவேண்டும். சர்வதேச அபிப்பிராயம் ஜனநாயக நீதிக் கோட்பாட்டின் கீழ்தான் கட்டியெழுப்பப்படுகின்றது.

நான்காவது இலங்கைத் தீவை மையமாக வைத்து நிகழும் புவிசார் அரசியலில் தமிழ் மக்களும் கௌரவமான பங்காளிகளாக மாறுவதாகும். இலங்கைத் தீவில் தமிழர் தாயகம் கேந்திர இடத்தில் இருக்கின்றது. இது மட்டுமல்ல தமிழகமும் கேந்திர இடத்தில் தான் இருக்கின்றது. இந்த இரண்டு கேந்திரப் பலமும் இணையும் போது தமிழ் மக்களின் கேந்திரப்பலம் உச்சமாகும்.

ஆயுதப் போராட்ட காலத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் தமிழ்த்தரப்பிற்கு பேரம்பேசும் பலத்தைக் கொடுத்தது. அதன்வழி புவிசார் அரசியலிலும் கௌரவமான பங்கைக் கொடுத்தது. வல்லரசுகள் தமிழ் மக்களின் விவகாரத்தைக் கைவிட்டுவிட்டு இலங்கை விவகாரத்தை அணுகமுடியாத நிலை இருந்தது. தற்போது சீனாவின் அதிகரித்த பிரசன்னம் தமிழ் மக்களுக்கு பேரம் பேசும் பலத்தைக் கொடுத்துள்ளது. இன்று அமெரிக்க - இந்திய - மேற்குலக அணி தமிழ் மக்கள் என்ற கருவியைப் பயன்படுத்தாமல் இலங்கை அரசின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. தமிழ் மக்களுக்கு இந்த வல்லரசுகள் தேவை என்ற நிலை மாறி வல்லரசுகளுக்கு தமிழ் மக்கள் தேவையாக உள்ளார்கள்.

ஐந்தாவது தமிழ்த் தேசிய அரசியலுக்குள் சமூகமாற்ற அரசியலையும் உள்ளடக்குவதாகும். சமூகமாற்ற அரசியலை உள்ளடக்காத தமிழ்த் தேசியம் ஒரு முற்போக்கான தமிழ்த்தேசியம் அல்ல. சமூக மாற்ற அரசியலை முன்னெடுக்காததால் நான்கு நெருக்கடிகள் உருவாகின்றன.

**1. இது ஒரு மனித உரிமை மீறல் விவகாரம். ஒரு மக்கள் பிரிவை அந்த மக்கள் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக ஒடுக்குவது மனித உரிமை மீறலே. தமிழர்களே தங்களுக்குள் ஒடுக்கு முறைகளை மேற்கொண்டிருக்கும் போது பேரினவாதம் ஒடுக்குகின்றது எனக் கூற முடியாது. இந்திய தேசிய விடுதலைப் போராட்டத்தின் போது சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடிய டாக்டர் அம்பேத்கார் காந்தியிடம் "இந்தியர்களினாலேயே நாம் ஒடுக்கப்படும் போது ஆங்கிலேயர்களினால் ஒடுக்கப்படுகின்றோம் என்ற உணர்வு வரவில்லை" எனக் கூறியிருந்தார்.**

**2. தேசம் என்பது மக்கள் திரளாகும். தேசியம் என்பது மக்கள் திரளின் கூட்டுப்பிரக்ஞையாகும். எனவே மக்கள் ஒன்றாகத் திரள்வதற்கு தடையாக இருப்பவையெல்லாம் தேசியத்திற்கு எதிரானவையாகும். அக முரண்பாடுகள் தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரள்வதற்கு தடையாக உள்ளன. இவற்றை அகற்றாமல் தேசமாகத் திரள்வது சாத்தியமல்ல.**

**3. அக முரண்பாடுகள் தமிழ் மக்கள். மத்தியில் இடைவெளிகளை உருவாக்கும். அந்த இடைவெளிகளை எதிரிகள் பயன்படுத்த முனைவர். இன்று சாதி முரண்பாடும், பிரதேச முரண்பாடும், மத முரண்பாடும், பால் முரண்பாடும் தமிழ்த் தேசியத்தின் எதிரிகள் நுழைவதற்கான பல களங்களைத் திறந்துவிட்டுள்ளன. யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் மட்டக்களப்பிலும் அதனைத் தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளது.**

**4. அக முரண்பாடுகள் சர்வதேச அபிப்பிராயங்களை எமக்கு சார்பானதாக உருவாக்குவதில் பல தடைகளை ஏற்படுத்தும். சர்வதேச அபிப்பிராயங்கள் புரட்சிகர நீதிக் கோட்பாட்டினால் வழிநடத்தப்படுவதில்லை. மாறாக ஜனநாயக நீதிக் கோட்பாட்டினாலேயே வழிநடத்தப்படுகின்றது. இந்த ஜனநாயக விழுமியங்களை அரசைவிட அதிகளவில் நாம் பின்பற்றுவதாகக் காட்டவேண்டும். எமக்குள்ளே ஒரு பிரிவினரை ஒடுக்கிக்கொண்டு சர்வதேச அபிப்பிராயத்தை நாம் பெற முடியாது.**

சர்வதேச அபிப்பிராயத்தை உருவாக்குவதில் அரசுகள் மட்டும் பங்குபெறுவதில்லை. சர்வதேச சிவில் சமூகமும் பங்கு பெறுகின்றது. அரசுகள் தங்களுடைய நலன்களிலிருந்து செயற்பட்டாலும் சர்வதேச சிவில் சமூகம் சர்வதேச ஜனநாயக விழுமியங்களின் அடிப்படையிலேயே செயற்படும். அவை அரசுகளுக்கும் அழுத்தம் கொடுக்கக்கூடிய வல்லமையைக் கொண்டது. இன்று சர்வதேச சிவில் சமூகத்தின் அபிப்பிராயம் தமிழ் மக்களுக்கு சார்பாக உள்ளது. பெரும் தேசியவாத ஒடுக்கு முறைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை. அக முரண்பாடுகள் பெரிதாக வளரின் தமிழ் மக்களுக்கு சார்பான சர்வதேச அபிப்பிராயங்களுக்கு சர்வதேச சிவில் சமூகம் ஒத்துழைக்காது. சர்வதேச சிவில் சமூகத்தில் ஜனநாயக முற்போக்கு சக்திகள், மனித உரிமைவாதிகள், ஊடகத்துறையினர் ஆன்மீகத்துறையினர் என்போர் அங்கம் வகிக்கின்றனர்.

தமிழ்த்தேசியம் ஒரு வாழ்வு முறையாக மாறும்போதே அக முரண்பாடுகளை எம்மால் கடக்கமுடியும். முன்னர் கூறியது போல அக முரண்பாடுகளில் சாதி முரண்பாட்டையும் பிரதேச முரண்பாட்டையும் இல்லாமல் செய்யவேண்டும். மத முரண்பாட்டிலும் பால் முரண்பாட்டிலும் சமத்துவத்தைப் பேணுதல் வேண்டும். எமது நிலம், எமது மொழி, எமது கலாசாரம், எமது பொருளாதாரம், எமது மக்கள் என்ற நிலை மேல்நிலைக்கு வரும் போது தமிழ்த்தேசியம் ஒரு வாழ்வு முறையாக பரிணமிக்கத்தொடங்கும். சீனத்தேசியம், யூதத் தேசியம், முஸ்லீம் தேசியம் என்பன ஒரு வாழ்வு முறையாக பரிணமிக்கும் போது தமிழ்த் தேசியம் மட்டும் ஏன் அவ்வாறு பரிணமிக்க முடியாது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை அக முரண்பாடுகளைக் களையும் ஆற்றல் தமிழ்த் தேசியத்திற்கு மட்டுமே உண்டு. மக்களைத் திரளாக்கல் என்ற பெருந்தேவை அதற்குள்ளது.

ஆறாவது சர்வதேச அரசியலை எமக்கு சார்பாக திருப்புவதாகும். தமிழ் மக்களின் அரசியல் வெற்றியை சர்வதேச அரசியலே தீர்மானிப்பதாக இருப்பதால் இது மிக மிக அவசியமாகும். பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் "தேசிய போராட்டத்தினால் தான் தேசிய அரசியல் உருவாகும். தேசிய போராட்டத்தினால் தான் அது வளர்ச்சியடையும். ஆனால் தேசிய போராட்டத்தின் வெற்றியை சர்வதேச அரசியலே தீர்மானிக்கும்" எனக் கூறியமை இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

இன்று சர்வதேச சிவில் சமூகத்தின் அபிப்பிராயம் தமிழ் மக்களுக்கு சார்பாக உள்ளது. பெரும் தேசியவாத ஒடுக்கு முறைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை. சர்வதேச சிவில் சமூகத்தில் ஜனநாயக முற்போக்கு சக்திகள், மனித உரிமைவாதிகள், ஊடகத்துறையினர் ஆன்மீகத்துறையினர் என்போர் அங்கம் வகிக்கின்றனர்.

ஏழாவது மக்கள் பங்கேற்பு அரசியலை தொடக்கி வைப்பதாகும். துரதிஷ்டவசமாக தமிழ் அரசியல் வரலாற்றில் மக்கள் பங்கேற்பு அரசியல் தோல்வி அடைந்துள்ளது. அரசியலில் மக்கள் பங்கேற்பதோ அதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்படுவதோ இடம்பெறவில்லை. மாறாக தொண்டர்களும் வீரர்களுமே பங்கேற்றனர். தமிழரசுக்கட்சிக் காலத்தில் தொண்டர்கள் பங்கேற்றனர். மக்கள் வாக்களிப்பதுடனும் அவ்வப்போது போராட்டங்களில் பங்குபற்றுவதுடனும் தமது கடமைகளை நிறுத்திக்கொண்டனர். ஆயுதப் போராட்ட காலத்தில் போராளிகள் பங்கேற்றனர். மக்கள் பணமும், நகையும் கொடுப்பதுடனும் அவ்வப்போது போராட்டங்களில் பங்குபற்றுவதனுடனும் தமது கடமைகளை நிறுத்திக் கொண்டனர். ஜனநாயக அரசியல் தளத்தினூடாக எமது இலக்கினை அடைவதற்கு இம் மக்கள் பங்கேற்பு அரசியல் மிகமிக அவசியமானதாகும். அரசியல் தலைமைகளின் குத்துக்கரணங்களை தடுத்து நிறுத்துவதற்கும் மக்கள் பங்கேற்பு மிகமிக அவசியமானதாகும். இங்கு மக்கள் பங்கேற்பு என்பது மக்களை அரசியல் மயப்படுத்தி அமைப்பாக்குவதாகும்.

எட்டாவது சிறிலங்கா அரசின் பச்சை ஆக்கிரமிப்புத் தொடர்பாக சர்வதேச பாதுகாப்புப் பொறிமுறையை உருவாக்குவதாகும். ஆயுதப் போராட்டம் இந்த ஆக்கிரமிப்புக்களைக் குறிப்பிட்டளவு தடுத்து வைத்திருந்தது. ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து பச்சை ஆக்கிரமிப்புத் தொடர்கின்றது. மன்னராட்சிக் காலத்தில் போரில் வெற்றிபெற்ற அரசுகள், தோல்வியடைந்த அரசுகளின் பிரதேசங்களை பச்சையாகச் சூறையாடும். அதுபோன்ற சூறையாடல்களே இப்போதும் இடம்பெறுகின்றன. இச் சூறையாடல்களினால் தமிழ்த் தேசத்தைத் தாங்கும் தூண்களான நிலம், மொழி, பொருளாதாரம், கலாசாரம் என நான்கும் ஆக்கிரமிக்கப்படுகின்றன. தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப்பதைச் சிதைப்பதே இந்த ஆக்கிரமிப்பின் நோக்கமாகும். இத்தகைய ஆக்கிரமிப்புக்களுக்கு மகாவலி அதிகார சபை, வன பரிபாலனத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம், புத்தசாசன அமைச்சு என்பன கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த ஆக்கிரமிப்புக்களை உடனடியாக நிறுத்த வேண்டும். உள்நாட்டு முயற்சிகள் இது விடயத்தில் பெரிய பயன்களைத் தராது. சர்வதேசப் பாதுகாப்புப் பொறிமுறையே அவசியமாகும்.

ஒன்பதாவது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு உத்தியோகபூர்வமற்ற அதிகாரக்கட்டமைப்பை உருவாக்குவதாகும். தமிழ் மக்களை அரசியல் விழிப்புணர்வோடு வைத்திருப்பதற்கும், போரினால் பாதிக்கப்பட்ட பொது மக்கள், போராளிகளின் நலன்களைப் பேணுவதற்கும், தமிழ் மக்களின் அடிப்படைப் பொருளாதாரத்தை தக்கவைப்பதற்கும், நிலம், மொழி, கலாசாரம் என்பவற்றை பாதுகாப்பதற்கும் எல்லாவற்றுக்கும் மேலாக தமிழ்த் தேசியத்தை ஒரு வாழ்வு முறையாக மாற்றுவதற்கும் இவ்வதிகாரக்கட்டமைப்பு அவசியமானதாகும்.

பத்தாவது கிழக்கைப் பாதுகாப்பதற்கு தனியான மூலோபாயத் திட்டங்களும் தந்திரோபாயத்திட்டங்களும் வகுக்கப்படல் வேண்டும். கிழக்கைக் பாதுகாப்பதில் தமிழ் அரசியல் வரலாற்று ரீதியாகவே தோல்வியடைந்திருக்கின்றது. அதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்கள் இருந்தன.

ஒன்று, கிழக்கில் தமிழ் - முஸ்லீம் முரண்பாடு இருக்கின்றது என்பதைக் கவனத்தில் எடுக்காமையாகும். இது விடயத்தில் "தமிழ் பேசும் மக்கள்" என்ற தமிழரசுக் கட்சிக்கான கொள்கை படுதோல்வியடைந்திருக்கன்றது. முஸ்லீம்கள் இந்தப் பொது அடையாளத்திற்குள் வருவதற்குத்தயாராக இல்லை. மறுபக்கத்தில் கிழக்குத் தமிழ் மக்களை ஒடுக்குவதற்கான கருவியாக பெரும்தேசியவாதம் முஸ்லீம் மக்களையும் பயன்படுத்துகின்றது. இந்நிலையில் இவ்விவகாரத்தை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பாக மூலோபாயங்களும், தந்திரோபாயங்களும் வகுக்கப்படல் வேண்டும். இவ்விவகாரத்தை நிலவிரிப்புக்குள் தள்ளி ஒழித்துவிட முடியாது.

இரண்டாவது, வடக்கின் அதிகாரத்தை கிழக்கில் திணிக்க முற்படுவதாகும். இதன் விளைவு பிரதேசவாதம் தலைதூக்கியதோடு கிழக்கில் சுயாதீனமான உள்ளூர்த் தலைமை வளரமுடியாத நிலைமை ஏற்பட்டமையாகும். இது விடயத்தில் கிழக்கு விவகாரங்களை கிழக்குத்தலைமை கையாளக்கூடியதாகவும், வடக்கு விவகாரத்தை வடக்கு தலைமை கையாளக்கூடியதாகவும் மொத்தத் தேசியவிவகாரத்தை வடக்கும் கிழக்கும் கூட்டாகக் கையாளக்கூடியதுமான பொறிமுறைகள் உருவாக்கப்படல்வேண்டும். கிழக்கை உலகிற்குக் கொண்டுவருவதும் உலகத்தை கிழக்கிற்கு கொண்டுவருவதும் இன்று மிகமிக அவசியமானதாகும். இவ்வழிவரைபடத்திலுள்ள பத்து அம்சங்களும் போதுமானவை எனக்கூற முடியாது. மேலும் மேலும் தேவையானவற்றை கண்டுபிடிக்க வேண்டும். தமிழ் அரசியல் நடைமுறையில் செயற்படுகின்றபோது தேவையான மேலதிக விடயங்கள் கண்ணுக்கு தெரியத் தொடங்கும்.

# “மலையக” தேசிய அடையாளத்தின் - பரிணாமங்களும், பரிமாணங்களும்

கடந்தவாரத் தொடர்ச்சி...

இந்திய வம்சாவளி மக்களின் அடையாளப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான உரையாடல்கள் அவ்வப்போது மேலெழுவதும் அப்படியே அமுங்கி விடுவதுமான போக்கே சில தசாப்தங்களாக தொடர்ந்து வந்திருக்கிறது. அந்த உரையாடல் பக்கசார்பான விவாதங்களுக்குள்ளேயே சுற்றி சுற்றி வந்தது. உறுதியான முடிவுக்கு வருவதாயின் அந்த உரையாடல், ஜனநாயக பூர்வமானதும், ஒரு பன்முகப்பட்டதுமான உரையாடலாக வளர்த்தெடுக்கப்பட்டு முடிவுக்கு வராவிட்டால் அது நிச்சயம் வெற்றி பெறப்போவதில்லை என்பதை உறுதியாக கூறி வைக்கலாம். இது அவரவர் சுய இன்பத்தை தீர்த்துக் கொள்வதற்கான உரையாடல் அல்ல. மாறாக சம்பந்தப்பட்ட மக்கள் உரிய முறையில் இணைத்துக் கொள்ளப்பட வேண்டிய உரையாடல். விஞ்ஞானபூர்வமாக தீர்க்கவேண்டிய பிரச்சினை. - **என்.சரவணன்**

07ஆம் பக்கத் தொடர்ச்சி...

இவ்வாதாரங்களை வைத்துப்பார்க்கும் போது ஆரியகுளம் என்ற பெயர் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியை நினைவுபடுத்திக்காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இதை மறுதலித்துக் கூறுவதற்கு வேறு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை.

மரபுரிமைச் சின்னம் என்பது அது சார்ந்த இனத்தின், பண்பாட்டின் அடையாளம், ஆணிவேர் எனப் பார்க்கப்படுகின்றது. விலைமதிக்க முடியாத இம்மரபுரிமைச் சொத்துக்களைச் சிறிதும் பிசகாமல் எதிர்காலச் சந்ததியிடம் கையளிக்கவேண்டிய நம்பிக்கை நாற்றுக்களாகவும் இவை காணப்படுகின்றன. தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எமது மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் ஒருமித்த கருத்துக்கள் இருப்பதையே காணமுடிகின்றது. இது அவர்களுடன் எனக்குள்ள நீண்டகாலத் தொடர்பின் வெளிப்பாடு. இன்று நிறைவுபெற்றுள்ள ஆரியகுள மீளுருவாக்கம் என்பது எமது மரபுரிமைச் சின்னங்களை நாமே பாதுகாக்கமுடியும் என்பதன் ஒரு அடையாளமாகவும், தொடக்கப்புள்ளியாகவும் பார்க்கப்படலாம். எதிர்காலத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆரியகுள மீளுருவாக்கப்பணி ஒரு முன்மாதிரியாக இருக்கவேண்டும் என்பதே அனைத்து தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

11ஆம் பக்கத் தொடர்ச்சி...

மனிதர்களின் வசதிக்காக குழந்தைகளுக்கு அவசியம் கிடைக்கவேண்டிய தாய்ப்பால் கிடைக்காத நிலைக்கு இந்த பால் மா சேர்த்த குழந்தை உணவுகளே காரணம் எனும் சர்ச்சை நிலவுகிறது. இது காரணமாக எதிர்காலத்தில் குழந்தைகளுக்கு பல உடல் அசௌகரியங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

2. ஊட்டச்சத்து தொடர்பான சர்ச்சைகள் : பாலில் காணப்படும் புரத மற்றும் கொழுப்புப் பொருட்கள் அகற்றப்பட்டு பன்றிக் கொழுப்புகள், பாம் எண்ணை, மெலமைன் போன்றவை சேர்க்கப்பட்டு பொய்யாக புரத மற்றும் கொழுப்பு பொருட்களின் சதவீதம் காட்டப்படுவதாக ஒரு குற்றச்சாட்டு உள்ளது. பல பால் நிறுவனங்கள் இதனை மறுத்தாலும் இந்த சர்ச்சை பாரதூரமானது. மேலும், பாலை வெப்பப்படுத்தி நீரை அகற்றும் செயன்முறை காரணமாக முக்கிய ஊட்டச்சத்துக்கள் அழிவடைவதும் மாற்றமடைவதும் பால் மா உற்பத்தியில் நிகழ்வதால் அதன் தரம் தொடர்பாகவும் கேள்வி எழுகிறது. அத்துடன் அமைப்பு மாற்றமடையும் உள்ளீடுகள் பல நோய்களைத் தரக்கூடிய நிலையை தோற்றுவிப்பதாக மருத்துவத் துறையினர் கூட குற்றம்சாட்டுகின்றனர்.

3. ஒவ்வாமை மற்றும் lactose intolerance : பொதுவாகவே மனித குடித்தொகையில், குறிப்பிட்ட சதவீதமானவர்களுக்கு பாலின் முக்கிய ஊட்டச்சத்தான lactose காரணமாக ஏற்படும் ஒருவித ஒவ்வாமை (intolerance) உள்ளது. இந்த வகையினர் பால்மாவுக்கும் ஒவ்வாமையை வெளிப்படுத்துகின்றனர். இது ஒரு சிக்கல் வாய்ந்த நிலையாகும்.

4. சேர்க்கப்படும் சேர்வைகள் தொடர்பான சர்ச்சைகள் : பாற் பொருள் உற்பத்தி செய்யும் நாடுகளில், குறிப்பாக பட்டர் செய்யும் போது கொழுப்பும், Whey புரதம் தயாரிக்கும் போது புரதமும் எடுக்கப்பட்டு, அவற்றை பிரதியீடு செய்ய பன்றிக் கொழுப்பு மற்றும் பாம் எண்ணை, மெலமைன் சேர்க்கப்படுவதாக குற்றம் சுமத்தப்படுகிறது. இது சுகாதார பிரச்சினைகளை மட்டுமின்றி சமய, கலாச்சார சிக்கல்களையும் ஏற்படுத்துகிறது.

5. தரம் மற்றும் பாதுகாப்பு : நியூசிலாந்து மேய்ச்சல் புல் வெளிகளுக்கு பாவிக்கப்படும் DCP போன்ற இரசாயனங்கள் பாலில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக ஒரு சர்ச்சை எழுந்தது. இது நுகர்வோருக்கு அச்சத்தை ஏற்படுத்தியது.

சரியான தரக்கட்டுப்பாடு சகல பால் மா வகைகளுக்கும் பார்க்கப்படுகிறதா எனும் சர்ச்சையும் அடிக்கடி எழுவதுண்டு. பல நாடுகளில் இந்த தரக் கட்டுப்பாடுகள் எதுவும் செய்யப்படாது நேரடியாகவே சந்தைக்கு விடப்படுகிறது எனும் குற்றச்சாட்டு உள்ளது.

6. சூழலியல் பிரச்சனைகள் : பால் மாவை உற்பத்தி செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்படும் மாடு வளர்ப்புச் செயன்முறைகள் பச்சை வீட்டு வாயுவான மெதேனை அதிகம் வெளிவிடுகின்றன. இது உலக வெப்பமுறலில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அதிகதிகமான பால் மாவை உற்பத்தி செய்யும் நியூசிலாந்து போன்ற நாடுகளில் பச்சை வீட்டு விளைவைத் தவிர நீர் நிலைகள் மாசுபடுதல் பயிர் நிலங்கள் மாசுபடுதல் போன்ற பல பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

7. விலை தொடர்பான பொருளாதாரப் பிரச்சினைகள் : இலங்கை போன்ற நாடுகளில் பால் மாவை நம்பித்தான் 60% ஆன பால் தேவை நிறைவு செய்யப்படுகிறது. இலங்கைக்கு பால் மாவை இறக்கும் பல்தேசிய நிறுவனங்கள் பால் மாவின் விலையை அடிக்கடி உயர்த்துவதும் உள்நோக்கத்துடன் சந்தைக்கு விடாமல் பதுக்குவதும் நுகர்வோரைக் கடுமையாகப் பாதிக்கிறது.

**வர்கீஸ் குரியனும் இலங்கை பால் உற்பத்தி நிலவரமும்**

சந்திரிக்கா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது இலங்கையின் பால் உற்பத்தியை மேம்படுத்த வெண்மைப் புரட்சியின் தந்தை வர்க்கீஸ் குரியனை அழைத்திருந்தார். இலங்கையினை கள ஆய்வு செய்தபோது நியூசிலாந்து நாட்டின் fonterra நிறுவனத்தின் செல்வாக்கை அவரால் உணர முடிந்தது.

பலம் மிக்க மலையகத் தமிழ் அரசியல்வாதி உட்பட இலங்கையின் பல அரசியல் பிரமுகர்கள் அந்தந்த பல்தேசிய நிறுவனங்களின் முகவர்களாகவே செயற்படுவதைக் காணுற்றார். யாராலும் அவர்களை கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது. இதன் பாரதூரத்தை தனது ‘எனக்கும் ஒரு கனவு’ எனும் சுயசரிதையில் இப்படிக் குறிப்பிட்டிருப்பார்.

அது தமிழீழ விடுதலைப் புலிகள் பலமாக இருந்த காலம். இலங்கை சென்ற குரியனுக்கு ஆயுதப் படையின் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. இது குரியனுக்கு பிடிக்கவில்லை. அசௌகரியமாக உணர்ந்தார். அதிபர் சந்திரிக்காவிடம் “நான் தமிழில் பேசக் கூடியவன் என்றபடியால் விடுதலைப் புலிகள் என்னை எதுவும் செய்ய மாட்டார்கள். தயவுசெய்து இந்த பாதுகாப்பை எடுங்கள்” என்றிருக்கிறார். அதற்கு அதிபர் சந்திரிக்கா” இது விடுதலைப்புலிகளிடம் இருந்து உங்களைப் பாதுகாக்க அல்ல. பால் பல் தேசிய நிறுவனங்களின் கூலிப்படைகளில் இருந்து உங்களைக் காக்க. சிறு தொகை பணத்துக்கே உங்களைக் கொன்றுவிடக்கூடும். அவர்களுக்கு இலங்கை பால் உற்பத்தியில் தன்னிறைவு காண்பது விருப்பமில்லை” என்றாராம்.

இது தவிர இந்தியாவிலிருந்த நியூசிலாந்தின் பல் தேசிய பால் நிறுவன பிரதிநிதி கூட இலங்கையின் பால் உற்பத்தி தன்னிறைவு காண்பதை விரும்பாமல் வர்கீஸ் குரியனுடன் தர்க்கித்திருக்கிறார். இலங்கை பாற் சந்தை மிகச் சிறியது. அதைக்கூட கைவிடும் நிலையில் பால் வழங்கும் பல் தேசிய நிறுவனங்கள் இருந்திருக்கவில்லை என்பதை இது காட்டுகிறது.

இலங்கையில் இன்றை வரைக்கும் பாலில் தன்னிறைவு காண முடியவில்லை. 40-50% உள்ளூர் உற்பத்தி. ஏனையவை இறக்குமதி. இது ஒரு மிகப் பெரிய சதி வலை போன்றது. இலகுவில் மாற்ற முடியாது. இது இப்படியிருக்க, இலங்கை பாலில் தன்னிறைவு காண, கறவை மாடுகளை நியூசிலாந்தில் இருந்து இறக்கியதுதான் முரண் நகைச்சுவை. ஆயிரக்கணக்கில் இறக்குமதியாகிய மாடுகள் கடைசியில் செத்து மடிந்ததுதான் மிச்சம். அதை இறக்கிய அரசியல் வாதிகள் கோடிக்கணக்கில் உழைத்துக்கொண்டார்கள் என்பது வேறுகதை.

**பாகிஸ்தானும் குரியனும்**

எண்பதுகளில் வர்கீஸ் குரியனை அழைத்து பாகிஸ்தான் அரசு, அந்த நாட்டு பாலுற்பத்தி துறையை மேம்படுத்த ஆலோசனை கேட்டிருந்தது. உலகில் கணிசமானளவு பாலுற்பத்தியை செய்யவல்ல நாடான பாகிஸ்தான் கூட தன்னிறைவு காணாத நிலையிலேயே இருந்தது. அன்றைய திகதியில் வெளிநாட்டிலிருந்து கணிசமான பால் மாவை பாகிஸ்தான் இறக்குமதி செய்திருந்தது. எனினும் இறக்குமதித் தீர்வை மிகக் குறைவாகவே அறவிட்டிருந்தது. இதன் காரணமாக உள்ளூர் பாற் பண்ணையாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர். வெளிநாட்டு நிறுவனங்கள் கொள்ளை லாபம் சம்பாதித்தனர். இதனை தவிர்க்கும் படி குரியன் பாகிஸ்தான் அரசுக்கு கூறினார். தீர்வையை அதிகரிக்கும்படி பரிந்துரைத்தார். ஊழலும் அரசியல் துஷ்பிரயோகமும் கொடிகட்டிப் பறந்த பாகிஸ்தானில் பல்தேசிய நிறுவனங்கள் சகலரையும் விலைக்கு வாங்கியிருந்தபடியால் இந்தியாவின் வெண்மைப் புரட்சியை அங்கு நிகழ்த்த முடியவில்லை என குரியன் தெரிவித்திருப்பார்.

இங்கு நான் இலங்கை, பாகிஸ்தானைப் பற்றி குரியனுடன் தொடர்புபடுத்திக் கூறியதற்கு ஒரு காரணமுண்டு. இந்தியா வெண்மைப் புரட்சியின் மூலம் தன்னிறைவு கண்டுள்ளது. ஏனெனில் பல் தேசிய பால் நிறுவனங்களின் வியாபார மூலோபாயத்துக்குள் சிக்காமல், சுயமாகச் சிந்தித்து தமது நாட்டின் பால் உற்பத்தி துறைக்கு முன்னுரிமை கிடைக்கும் வகை செய்திருந்தார்கள். அறுபதுகளில் உலக உணவுத் திட்டம் மூலம் கிடைத்த ஒரு தொகை பால் மாவையும் நாட்டின் திரவப் பால் கட்டமைப்புக்குள் இணைத்தனரே தவிர மக்களுக்கு நேரடியாக வழங்கி உள்ளூர் பாற் துறையை பாதிக்கவிடவில்லை. இன்று கூட பால் மாவை யுத்தம் போன்ற அவசர தேவைக்காகவும் மித மிஞ்சிய பால் உற்பத்தியை சேமிக்கும் வழியாகவுமே இந்தியா பயன்படுத்துகிறது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி உதவிக்கும் இந்தியா பால் மாவை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. பால் உற்பத்தி குறையும் போது பால் மாவை திரவமாக்கி மக்களுக்கு வழங்குகிறார்கள். இந்திய மக்களும் பால் மாவை விட திரவப் பாலுக்கே பழகியுள்ளனர். பசு மட்டுமல்ல எருமையிலிருந்தும் பால் மாவை இந்தியா உற்பத்தி செய்கிறது.

உண்மையில் திரவப் பாலை பெருந்தொகையில் இறக்குமதி செய்ய முடியாது. அதற்கு மக்களை பழக்கவேண்டும். தற்போது இலங்கையை விட பாகிஸ்தான் பாலுற்பத்தியில் தன்னிறைவு கண்டுள்ளது. இலங்கையின் பாலுற்பத்தியின் தன்னிறைவுப் பயணம் இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## 730 கோடியை எம்பாப்பே மறுத்ததன் பின்னணி



தனது தாயாருக்கு லிவர்பூல் அணி பிடிக்கும் என கூறிய எம்பாப்பே, ஏற்கனவே அந்த அணியுடன் பேசியதாக கூறியது தற்போது தெரிய வந்துள்ளது.

பிரான்ஸ் நட்சத்திர வீரர் கைலியன் எம்பாப்பே PSG அணிக்காக விளையாடி வருகிறார். நடப்பு சீசன் முடிவில் அவரின் ஒப்பந்தம் காலாவதி ஆகிறது. ஆதலால், ரியல் மாட்ரிட் மற்றும் லிவர்பூல் அணிகள் அவரை இணைத்துக்கொள்ள போட்டியிடுகின்றன.

இதில் ரியல் மாட்ரிட் அணியின் ஒப்பந்த முயற்சியை எம்பாப்பே விரும்பவில்லை என்றும், அதன் முன்மொழிவை அவர் நிராகரித்ததாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இதற்கிடையில், PSG அணியின் லாயல்டி போனஸை (ரூ.730 கோடி) கைவிடவும் எம்பாப்பே தயாராக இருப்பதாக தகவல்கள் வெளியாகின. இந்த நிலையில் தனது தாயாருக்கு பிடித்த அணி லிவர்பூல் தான் என்று அவர் கூறியிருந்தார்.

**ரூ.730 கோடி ஊக்க ஊதியத்தை வேண்டாம் என்று மறுத்த கைலியன் எம்பாப்பே**

இதுகுறித்து 2022யில் அவர் பேசியபோது, "நாங்கள் (livarpool) கொஞ்சம் பேசினோம், ஆனால் அதிகமாக இல்லை. ஏனென்றால் அது என் அம்மாவுக்கு பிடித்த கிளப். அவர் liverpool-ஐ விரும்புகிறார். ஏன் என்று எனக்கு தெரியாது. நீங்கள் அவரிடம் தான் அதை கேட்க வேண்டும். இது ஒரு நல்ல கிளப். நாங்கள் அவர்களை 5 ஆண்டுகளுக்கு முன்பு சந்தித்தோம். நான் மொனாக்கோவில் இருந்தபோது அவர்களை சந்தித்தேன். இது ஒரு பெரிய கிளப்" என தெரிவித்தார்.

**சாத்தியக் கூறுகள்**

இதனால் எம்பாப்பே லிவர்பூல் அணியில் இணையவே அதிக சாத்தியக்கூறுகள் உள்ளதாக தெரிகிறது.மேலும், பிரீமியர் லீக்கிற்கான சாத்தியமான நகர்வை இப்போது அவர் ஆராய்ந்து வருகிறார். இது அந்த அணி ரசிகர்களின் கவனத்தை ஈர்க்கும் என்பதில் சந்தேகமில்லை. இதனிடையே, ரியல் மாட்ரிட் தரப்பு ஜனவரி 15 வரை எம்பாப்பேவுக்கு காலக்கெடு வழங்கியதாக கூறப்படுகிறது.

## அர்ஜுனா விருது பெற்ற முகமது ஷமி நெகிழ்ச்சி

இந்திய கிரிக்கெட் வீரர் முகமது ஷமி டெல்லியில் நடந்த விழாவில் ஜனாதிபதியிடம் அர்ஜுனா விருது பெற்றார்.

**உலகக்கோப்பையில் மிரட்டல்**

2023 ஒருநாள் உலகக்கோப்பை தொடரில், இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் முகமது ஷமி மிரட்டலான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

அவர் 7 போட்டிகளில் 24 விக்கெட்டுகளை கைப்பற்றி அதிர வைத்தார். இதன் மூலம் ஷமியின் பெயர் விருதுக்காக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்டது.

இந்த நிலையில் டெல்லியில் நடந்த தேசிய விளையாட்டு விருதுகளை வழங்கும் விழாவில் ஷமிக்கு அர்ஜுனா விருது வழங்கப்பட்டது.

**ஷமி நெகிழ்ச்சி**

ஜனாதிபதி திரௌபதி முர்மு அவருக்கு விருதினை வழங்கி கௌரவித்தார்.

அதன் பின்னர் விருது பெற்றது குறித்து ஷமி கூறும்போது,

"இந்த விருது ஒரு கனவு, வாழ்க்கை கடந்து செல்கிறது. இந்த விருதை மக்களால் வெல்ல முடியவில்லை. இந்த விருதுக்கு நான் பரிந்துரைக்கப்பட்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்" என்றார்.



## தென்னாபிரிக்கா: U19 அணியின் கேப்டன் அதிரடி மாற்றம்

இஸ்ரேலுக்கு ஆதரவான கருத்துக்களை தெரிவித்ததற்காக தென்னாபிரிக்க 19 வயதுக்குட்பட்டோருக்கான அணியின் தலைவர் David Teeger நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கடந்த ஆண்டு, டேவிட் டீகர் பாலஸ்தீன ஆக்கிரமிப்பில் இஸ்ரேலிய வீரர்களை ஆதரிப்பது பற்றி கருத்து தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவில் அடுத்த வாரம் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி நடைபெற உள்ள நிலையில், அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் டேவிட் டீகர் மீது கடும் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதே சமயம் உலக கோப்பை அணியில் இருந்து டேவிட் டீகர் நீக்கப்படவில்லை என்ற தகவலும் வெளியாகி வருகிறது. அவர் அணித்தலைவர் பொறுப்பில் இருந்து மட்டுமே நீக்கப்பட்டார்.



Cricket South Africa வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த முடிவு அணியில் உள்ள வீரர்கள், 19 வயதுக்குட்பட்ட அணி மற்றும் டேவிட் ஆகியோரின் நலனுக்காகவே என்று தெரிவித்துள்ளது.

டேவிட் அணியின் கேப்டனாகத் தொடர்வது ஸ்டேடியம் உட்பட பெரும் போராட்டங்களுக்கு வழிவகுக்கும் என்ற மதிப்பீட்டைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## டி20 அணிக்கு கேப்டனான வனிந்து ஹசரங்கா

ஜிம்பாப்வே அணிக்கு எதிராக விளையாட உள்ள டி20 அணியை இலங்கை நிர்வாகம் அறிவித்துள்ளது. இலங்கை மற்றும் ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டி20 தொடர் இன்று தொடங்குகிறது.

இதற்கான இலங்கை அணி தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் கேப்டனாக வனிந்து ஹசரங்கா நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கனவே இலங்கையின் டி20 அணிக்கு ஹசரங்க கேப்டனாக செயல்படுவார் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது.

16 வீரர்களில் ஒருவராக இடம்பெற்றுள்ள சரித் அசலங்க துணை கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். அனுபவ வீரர் ஏஞ்சலோ மேத்யூஸ், அகில தனஞ்செய ஆகியோரும் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

**அணி விபரம்:**

வனிந்து ஹசரங்கா (கேப்டன்)
சரித் அசலங்க (துணை கேப்டன்)



குசல் மெண்டிஸ்
சதீர சமரவிக்ரம
குசால் ஜனித் பெரேரா
ஏஞ்சலோ மேத்யூஸ்
தசுன் ஷானாக
தனஞ்செய டி சில்வா
கமிந்து மெண்டிஸ்
பதும் நிசங்கா (Subject to fitness)
மஹீஷ் தீக்ஷண
துஷ்மந்தா சமீர
தில்ஷன் மதுஷங்கா
மதீஷா பத்திரன
நுவான் துஷார
அகில தனஞ்செய

## மரியோ சகால்லோ காலமானார்

பிரேசில் நாட்டை சேர்ந்த கால்பந்து ஜாம்பவான் மரியோ சகால்லோ (Mario Zagallo) தனது 92 வயதில் காலமானார். பிரேசில் அணியின் வீரராக இரண்டு முறையும், அணியின் பயிற்சியாளராக இரண்டு முறையும், அணி கால்பந்து உலக கோப்பையை வெல்வதற்காக மரியோ சகால்லோ (Mario Zagallo) முக்கிய பங்காற்றினார்.

கடந்த 1958 மற்றும் 1962 ஆம் ஆண்டுகளில் நடந்த உலக கோப்பை தொடர்களில் பிரேசில் அணியின் மற்றொரு ஜாம்பவானான பீலே உடன் இணைந்து விளையாடி அணிக்கு கோப்பையை வென்று கொடுத்தார்.

இதனைத் தொடர்ந்து, 1970 மற்றும் 1994 ஆம் ஆண்டுகளில் உலக கோப்பையை வென்ற பிரேசில் அணியின் பயிற்சியாளராக இவர் செயல்பட்டார்.



இந்நிலையில், சமீபத்தில் உடல்நிலை குறைவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வந்த மரியோ சகால்லோ கடந்த வெள்ளிக்கிழமை அன்று காலமானார். இவரது மறைவிற்கு பிரேசில் நாட்டில் 3 நாட்களுக்கு துக்கம் அனுசரிக்கப்படும் என அந்நாட்டின் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா அறிவித்திருந்தார்.

# உலக வலம்

## கூட்டுத் தாக்குதலால் அதிரும் ஏமன்



ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் இலக்குகளுக்கு எதிராக அமெரிக்க மற்றும் பிரித்தானிய வான்வழித் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச தகவல்கள் கூறுகின்றன. ஏமன் தலைநகர் சானா உட்பட பல நகரங்களின் இலக்குகள் மீது வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்காக விமானங்கள், கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதே வேளை கடந்த நவம்பர் 19ஆம் திகதி முதல் செங்கடலில் கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் 27 தாக்குதல்களை நடத்தியதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் நிலைமையை கட்டுப்படுத்த அமெரிக்கா, பிரித்தானியா கூட்டு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

## சரிந்த சீனாவின் ஏற்றுமதி



சீனாவின் ஏற்றுமதி, ஏழு ஆண்டுகளில் இல்லாதளவில் சரிந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்காவுடனான பதற்றம் மற்றும் உலக பொருளாதார தடுமாற்றத்திற்கு பிறகான மீட்சி ஆகியவற்றால் இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. கடந்த ஆண்டுகளில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பங்கு வகிக்கும் ஏற்றுமதியின் மதிப்பு சரிந்திருப்பது சீனாவிற்கு நெருக்கடிகளை ஏற்படுத்தலாம் என கருதப்படுகின்றது.

**பன்னாட்டு அழுத்தங்கள்**

அதன்படி, அமெரிக்காவுடனான வர்த்தகம் கடந்த 4 ஆண்டுகளில் முதன்முறையாக சரிந்துள்ள அதே நேரத்தில் ரஷ்யாவுடன் வர்த்தகம், உக்ரைன் உடனான போர்ப் பதற்றத்தால் உண்டான பன்னாட்டு அழுத்தத்தால் இதுவரை இல்லாதளவுக்கு அதிகரித்துள்ளது.

இந்நிலையில் அடுத்தடுத்த மாதங்களில் இன்னும் சில பிரச்சினைகள் வரக்கூடும் என எச்சரிக்கப்படுகிறது. அதேசமயம் பன்னாட்டு வணிகத்தில் கூடுதல் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் எனவும் சீனாவின் சுங்கத்துறை இணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் முதல் சரிந்திருந்த ஏற்றுமதி நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் அதிகரித்தபோதும், 2022 டிசம்பர் மாதத்தின் மிகக் குறைந்த தரவுகளோடு ஒப்பிடும்போது குறைந்தளவாக உள்ளது. 2023-ல் அதற்கு முந்தைய ஆண்டைவிட ஒட்டுமொத்தமாக 4.6 சதவீதமளவுக்கு ஏற்றுமதி சரிந்துள்ளது. அதேவேளை 2016க்குப் பிறகு ஏற்படுகிற மிகப்பெரிய சரிவு இது என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனா திரிபு தொடர்பில் எச்சரிக்கை



சீனாவின் வூஹான் நகரில் 2019 டிசம்பர் இறுதியில் தோன்றி பரவிய கொரோனா வைரஸ் நுண்கிருமியால், கொவிட்-19 எனும் சுவாச தொற்று நோய் உலகம் முழுவதும் வேகமாக பரவியது. 2020 ஆம் காலப்பகுதியில் உலகம் முழுதும் பரவிய இக் கொரோனா பெருந்தொற்று இலட்சக்கணக்கான உயிர்களை காவு வாங்கியது.

இலட்சக்கணக்கான உயிரிழப்பினாலும் பாரிய பொருளாதார வீழ்ச்சியினாலும் தடுப்பூசி கண்டுபிடிக்கப்பட்டு மக்களுக்கு செலுத்தப்பட்டு கொரோனாத் தொற்று பரவுகை படிப்படியாக் குறைவடைந்தது. சமூகமாக சென்றுக் கொண்டிருந்த நிலையில் தற்போது ஜேஎன் 1 எனும் (JN1) எனும் புதிய கொரோனா திரிபு பரவுகைத் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

2023 டிசம்பர் மாதம் மட்டுமே, ஜேஎன்.1 திரிபால் சுமார் 10 ஆயிரம் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

எண்ணிக்கையில், கொரோனா பெருந்தொற்று காலத்தை ஒப்பிட்டால் இது குறைவுதான் என்றாலும் விழிப்புடன் அனைவரும் செயற்பட வேண்டும். இதுவும் ஒமிக்ரான் (omicron) வகை வைரஸ் என்பதால், கொரோனாவிற்கு எதிரான தடுப்பூசிகளே இந்த வைரசுக்கு எதிராக பாதுகாப்பு அளிக்கும்.

மக்கள் இதுவரையில் தடுப்பூசி பெற்றுக்கொள்ளாவிட்டால் விரைவாக செலுத்திக்கொள்ளவேண்டும். அத்துடன் முகக்கவசம் அணிவதும், பணிபுரியும் இடங்கள் மற்றும் வசிக்கும் இடங்கள் காற்றோட்டமாக இருக்குமாறு பார்த்து கொள்ளவேண்டியதும் அவசியம் என உலக சுகாதார அமைப்பின் தலைவர் எச்சரித்துள்ளார்.

## அமேசன் மற்றும் கூகுளில் தொடரும் பணிநீக்கம்




கொரோனா பெருந்தொற்று காலத்திற்கு பிறகு உலக பொருளாதாரம் பெரும் நெருக்கடியை சந்தித்து வருகிறது. உலகளவில் பெரும்பான்மையான மக்களிடம் "வாங்கும் சக்தி" குறைந்ததால் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தேவைகள் குறைந்துள்ளது. நிறுவனங்களின் விற்பனையில் தேக்க நிலையையும் உருவாக்கியுள்ளது.

2022 மார்ச்சில் தொடங்கிய ரஷிய - உக்ரைன் போர் மற்றும் 2023 அக்டோபரில் தொடங்கிய இஸ்ரேல் - ஹமாஸ் போர், அமெரிக்க-சீன வர்த்தக உறவில் நீடிக்கும் சிக்கல், சீனாவில் சரிய தொடங்கியுள்ள உள்நாட்டு பொருளாதாரம், நிலையற்ற கச்சா எண்ணெய் விலை உள்ளிட்ட பல காரணங்கள் இந்த பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக சொல்லப்படுகிறது.

கடந்த வருடம் முதல் இதன் தாக்கம் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் காலாண்டு அறிக்கையிலும் எதிரொலிக்க தொடங்கியதால், உலகின் பல முன்னணி தகவல் தொழில்நுட்ப மற்றும் மென்பொருள் நிறுவனங்கள் நஷ்டத்தை குறைக்க ஆட்குறைப்பை தொடங்கின. "லே ஒஃப்" (layoffs) அல்லது ஜொப் கட்ஸ் (job cuts) என அழைக்கப்படும் இந்த நடவடிக்கையின் தொடர்ச்சியாக கடந்த ஆண்டே அமேசான், மைக்ரோசொப்ட், காக்னிசன்ட் மற்றும் கூகுள் உட்பட பல நிறுவனங்கள், தங்கள் ஊழியர்களை பணிநீக்கம் செய்தன.

தற்போது அடுத்த சுற்றில் மேலும் பல ஊழியர்களை அமேசான் மற்றும் கூகுள் நீக்கியுள்ளது. அமேசான், முன்னரே ட்விட்ச் லைவ்ஸ்ட்ரீமிங் யூனிட்டில் 500 ஊழியர்களை பணிநீக்கம் செய்திருந்தது. தற்போது ப்ரைம் வீடியோஸ் (Prime Videos) மற்றும் எம்ஜிஎம் ஸ்டூடியோ (MGM Studios) கிளைகளில் இருந்து நூற்றுக்கணக்கானவர்களை நீக்கியது.

கூகுள், செலவினங்களை கட்டுப்படுத்த டிஜிட்டல் கூகுள், செலவினங்களை கட்டுப்படுத்த டிஜிட்டல் அசிஸ்டன்ட், ஏஆர் (ஆக்மென்டட் ரியாலிட்டி), மற்றும் பொறியியல் துறைகளில் பணியாற்றியவர்களை நீக்கியது. பொருளாதார மந்தநிலை நீடித்தாலோ, மேலும் நலிவுற்றாலோ இத்தகைய பணிநீக்கங்கள் கடுமையாக அதிகரிக்கும் என மனிதவள நிபுணர்கள் எச்சரிப்பதால் மென்பொருள் துறையில் வேலை செய்பவர்கள் கவலையில் இருக்கின்றனர்.

## உக்ரைனுக்கு பகிரங்க மிரட்டல்



போரில் உக்ரைன் மேற்கத்திய நாடுகளின் ஏவுகணைகளை பயன்படுத்தினால் அணு ஆயுதத்தை கையில் எடுப்போம் என ரஷ்யா பகிரங்க மிரட்டல் விடுத்துள்ளது.

ரஷ்யாவின் பாதுகாப்பு கவுன்சில் டிமிட்ரி தலைவர் மெத்வதேவ் இது தொடர்பாக கூறுகையில், "அமெரிக்கா வழங்கிய ஏவுகணைகளை உக்ரைன் பயன்படுத்த நினைக்கிறது. இதை தற்காப்பாக கருத முடியாது. இருப்பினும், போரில் அணு ஆயுதத்தை ரஷ்யா பயன்படுத்துவதற்கான அடிப்படை விடயமாக இது அமையும்" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## ஸ்பெயினில் மீண்டும் முகக்கவசம் அணிதல் கட்டாயம்

ஐரோப்பிய நாடான ஸ்பெயினில் நாட்டில் காய்ச்சல், கொரோனா மற்றும் பிற சுவாச நோய்கள் அதிகரித்து வருவதால், வியாழக்கிழமை (11) முதல் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் சுகாதார மையங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சுகாதார வசதிகள் மற்றும் மருந்தகங்களில் முகக்கவசங்களின் பயன்பாடு கட்டாயமாக நிறுத்தப்பட்ட ஆறு மாதங்களுக்குப் பிறகு எடுக்கப்பட்ட அரசாங்க முடிவுகள், சில பிராந்திய நிர்வாகங்களின் எதிர்ப்பை எதிர்கொண்டது. இந்நிலையில் ஸ்பெயின் நாட்டின் வெலெனிக்கா, கடலொனியா, முர்சியா ஆகிய மாகாணங்களில் பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.


## பிரான்ஸின் பிரதமராக கேப்ரியல் அட்டல் நியமனம்



பிரான்ஸ் பிரதமராக இருந்த எலிசபெத் போர்ன், தனது பதவியை ராஜினாமா செய்த நிலையில் வெற்றிடமாக இருந்த அந்த பதவிக்கு 34 வயதான கேப்ரியல் அட்டல் நியமிக்கப்பட்டுள்ளார். பிரான்ஸ் ஜனாதிபதியான இமானுவேல் மேக்ரான் மீது சமீப காலமாக அந்நாட்டு மக்கள் அதிருப்தியில் உள்ளதாக தகவல்கள் வந்தன.

இந்த நிலையில், அந்நாட்டு பிரதமராக இருந்த எலிசபெத் போர்ன், தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார். இதனை ஏற்றுக் கொண்ட இமானுவேல் மேக்ரான், புதிய பிரதமர் நியமிக்கப்படும் வரை அவர் பதவியில் நீடிப்பார் என்று அறிவித்துள்ளார். இதன்படி பிரான்ஸின் 2 ஆவது பெண் பிரதமர் என்ற பெருமைக்குரியவர் எலிசபெத் போர்ன். இதனை தொடர்ந்து கல்வி அமைச்சர் கேப்ரியல் அட்டலை பிரதமராக ஜனாதிபதி இமானுவேல் மேக்ரான் நியமித்துள்ளார். 34 வயதான கேப்ரியல் அட்டல் ஓர் ஓரினச்சேர்க்கையாளர் என்பதுடன் பிரான்ஸின் இளம் பிரதமர் என்ற பெருமைக்குரியவரானார். மேலும் ஓரினச்சேர்க்கையாளர் ஒருவர் பிரான்ஸ் பிரதமர் ஆவது இதுவே முதன்முறையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தங்க குவியல் மீது கட்டப்பட்டுள்ள நகரம்

தென் அமெரிக்க நாடான பெருவில் அமைந்துள்ள லா ரின்கோனாடா நகரம் தங்க குவியலின் மீது கட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. குறித்த நகரத்தில் தங்கம் காணப்படும் விண்வெளி புகைப்படமொன்றை ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் வெளியிட்டுள்ளது. இந்நிலையில், பல நாடுகளின் பொருளாதாரத்தை மேம்படுத்த போதுமான தங்கம் இந்த City on Gold இன் கீழே உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நகரம் உலகின் மிக உயரமான நகரமாக கருதப்படுகின்றமையால் விண்வெளிக்கு மிக அருகிலான (City Closest To Space) உயரத்தில் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன், அதன் உயரம் காரணமாக, இது கிரீன்லாந்தைப் போல மிகவும் குளிராக காணப்படுகிறது.

மேலும், நகரத்தின் மக்கள் தொகை 60 ஆயிரமாக காணப்படுகின்றதொடு இங்கு அதிகமான மக்கள் தற்போது வந்து குடியேறுவதாக கூறப்படுகிறது. அதுமட்டுமின்றி, இங்கு ஏராளமான சுற்றுலா பயணிகளும் வந்து செல்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆண்டெஸ் மலையில் அமைந்துள்ள இந்த லா ரின்கோனாடா நகருக்கு அடியில் பல தங்கச் சுரங்கங்கள் உள்ளன, சட்டப்படி, இங்கு சுரங்கம் தோண்டுவதற்கு அனுமதி இல்லை, எனினும் பல நிறுவனங்கள் சட்டவிரோதமாக இங்கு தங்கச் சுரங்கங்களை தோண்டி வருவதும் தெரியவந்துள்ளது.

## மழையில் 3மணி நேரம் ஐஸ் பெட்டிக்குள் நின்று சாதனை

போலந்து நாட்டைச் சேர்ந்த வலர்ஜன் ரோமானோவ்ஸ்கி என்பவர் கொட்டும் மழையில் கிட்டத்தட்ட மூன்று மணி நேரம் ஐஸ் கட்டிகள் கொட்டப்பட்ட பெட்டிக்குள் இருந்து சாதனை படைத்துள்ளார்.

முன்னதாக, பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ரொமைன் வாண்டன்டோர்ப் 2 மணி 35 நிமிடங்கள் 33 வினாடிகள் ஐஸ் கட்டிகள் அடங்கிய பெட்டிக்குள் இருந்து சாதனை படைத்துள்ளார்.

இந்நிலையில், ரோமானோவ்ஸ்கி 3 மணி நேரம் 28 வினாடிகள் ஐஸ் கட்டிகள் அடங்கிய பெட்டிக்குள் இருந்து வெற்றிகரமாக அந்த சாதனையை முறியடித்து புதிய சாதனையை படைத்துள்ளார்.

மேலும், கின்னஸ் உலக சாதனைகளுக்கு ரோமானோவ்ஸ்கியின் வீடியோவைப் பகிர்ந்துள்ளார்.

இது குறித்து ரோமானோவ்ஸ்கி கூறியதாவது, "நான் பல ஆண்டுகளாக குளிர்ச்சியை எதிர்கொள்கிறேன். நான் பல பயிற்சிகளை மேற்கொண்ட பின் தான் இந்த சாதனையை செய்தேன்.

உடல் மற்றும் மனதுக்கு வேலை செய்வது எனது விருப்பம். அது எனக்கு மிகுந்த திருப்தியைத் தருகிறது" என்று கூறினார்.




## 80 வயது மூதாட்டியின் சாகச சாதனை


கடலில் 80 வயது நிரம்பிய ஒரு பாட்டி தனது பேத்தியுடன் சர்ஃப்பிங் செய்யும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. சாகசங்கள் செய்ய பல வழிகள் உள்ளன. மலை ஏறுவது, படகு சவாரி, வானில் பறப்பது, ஒற்றை கயிற்றில் மலையில் இருந்து தொங்குவது என்று.

அதை போலத்தான் கடலின் அலைகளோடு விளையாடும் ஒரு சாகச விளையாட்டு சர்ஃப்பிங். அதுவே கொஞ்சம் தீவிரமானால், பெரிய சுவர் போன்ற அலைகளோடு உலவும் பிக்-வேவ் சர்ஃப்பிங் என்று அழைக்கப்படுகிறது. கடலில் குளிப்பது, கடற்கரையில் காலை நனைப்பது, அந்த வாசத்தில் அமர்ந்து இருப்பது ஒரு வகையினருக்கு பிடிக்குமென்றால் அதில் இறங்கி நீச்சலடிப்பது, பல்வேறு ரைடு போவது, ஸ்நோர்கெலிங் செய்வது, சர்ஃபிங் செய்வது போன்ற நீர் விளையாட்டுகள் சாகச விரும்பிகளின் தேர்வாகும்.

வயது என்பது வெறும் எண்களே என்று பலரும் கூறக்கேட்டிருப்பீர்கள். அந்த வகையில் 80 வயது மூதாட்டி பழமொழியை உண்மை என நிரூபித்துள்ளார். இன்ஸ்டாகிராமில் பகிரப்பட்ட ஒரு வீடியோ, தற்போது ட்ரெண்டாகி வருகிறது.

கோஸ்டாரிகா ஒலிம்பிக் தடகள வீராங்கனையும், 80 வயதான அந்த பாட்டியின் பேத்தியுமான பிரிசா ஹென்னெஸி, இன்ஸ்டாகிராமில் இந்த வீடியோவைப் பகிர்ந்துள்ளார்.

"இந்த மகிழ்ச்சியான இடத்தை என் பாட்டியுடன் பகிர்ந்து கொள்வது மிகவும் சிறப்பு" என்ற மேற்கோளுடன் தனது பாட்டி கடலில் முதன்முறையான தனது 80 வயதில் சர்ஃப்பிங் செய்யும் வீடியோவை அந்த பெண் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். தனது பேத்தியின் உதவியுடன் அவர் எப்படி இந்த அலை சவாரியை செய்கிறார் என்பதை அவர்கள் பதிவிட்ட வீடியோ காட்டுகிறது. இந்த வீடியோவில் பலரும் தனது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தி வருகின்றனர். சர்ஃப்பிங் செய்யும் போது அவர்கள் பெற்ற அனுபவத்தையும் பகிர்ந்து வருகின்றனர்.



இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 14.01.2024 அன்று வெளியிடப்பட்டது.